Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-24 07-05-2005 சனிக்கிழமை ஓசை 78


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247
(சி-11901)

# சனாதிபதி சந்திரிகா - ஜே.வி.பி சந்திப்பு

# இணக்கப்பாடு எதுவுமின்றி முடிவுற்றது!

## மே-10 முதல் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி தொடர் போராட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் ஜே.வி.பி. முக்கியஸ்தர்களுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பு இணக்கப்பாடு எதுவுமின்றி முடிவுற்றதாகத் தெரியவருகின்றது. இதேவேளை, உத்தேச பொதுக் கட்டமைப்பை எதிர்த்து மே-10ஆம் திகதி முதல் ஜே.வி.பி தொடர் போராட் டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது.**

நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பில் சனாதிபதி, ஜே.வி.பி. தரப்பில் விமல் வீரவன்ச உட்பட்ட முக் கியஸ்த்தர்களும் கலந்து கொண் டனர்.

பொதுக்கட்டமைப்பு, இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு , எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நன்கொடையாளர் மாநாடு என்பன பற்றியும் பிரஸ் தாபிக் கப்பட்டது. ஆயினும் இச்சந்திப்பில் பொதுக் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் காவலரண் மீதான தாக்குதல் முறியடிப்பு

### -போ. நி. க. குழுவுக்கு முறைப்பாடு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கட்டைப்பறிச்சான் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கும் இடையிலான யுத்த சூனிய பிரதேசத்திற்கு அப்பாலுள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண் மீது நேற்று முன்தினமிரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட் டுள்ளது. இரவு 8.00 மணியளவில் இனந்தெரியாத இருவர் மேற்படி காவலரண் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனையடுத்து அக் காப்பரணில் கடமையிலிருந்த போராளிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலையடுத்து தாக்குதலை நடாத்திய இருவரும் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் நோக்கித் தப்பி யோடியுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் டி.சிவராம் கொலையை ஆராய சர்வதேச சுயாதீன ஆணைக்குழு வேண்டும்

### பாராளுமன்றில் இரா. சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலை தொடர்பாக ஆராய்வதற்கு சர்வதேச சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா அரசிடம் கேட்டுள்ளது. தமிழ் ஊடகவிய லாளர்களின் கொலை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே ஆர். சம்பந்தன் அரசிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார். அவர் அங்கு தனதுரையில் மேலும் கூறுகையில்: இந்தக் கொலை தொடர்பாக அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாக தமக்கு நம்பிக்கை இல்லையெனவும் கூறினார்.

## சிவராம் படுகொலையை கண்டித்து வவுனியாவில் அமைதிப் பேரணி

(செட்டிகுளம்)

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை செய்யப்பட்ட மையைக் கண்டித்தும் கொலை யாளிகளை உடனடியாகக் கைது செய்யக் கோரியும் வவுனியாவில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமைதிப் பேரணி ஒன்று நடை பெறவுள்ளது. இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் வன்னி பத்தி ரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்து வரு கின்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு-பொலநறுவை எல்லைப்புற காட்டில் இரு சடலங்கள் மீட்பு!

மட்டக்களப்பு - பொலநறுவை மாவட்ட எல்லைப்புற காட்டுப்பகுதியில் இரண்டு சடலங்கள் நேற்றுப் பிற்பகல் வாழைச்சேனை பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து அந்த இடத்திற்கு சென்ற பொலிசார் ரன்சரதென்ன என்னுமிடத்தில் அந்தச் சடலங்களை கைப்பற்றியுள்ளனர். இந்த இடம் மகாவலி திட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகும். இச்சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காண்பதற்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக வாழைச் சேனை பொலிசார் தெரிவித்தனர்.

## நெருக்கடியான வேளைகளில் தலைவரின் திட்டங்களுக்கு துணிந்து நின்று செயல் வடிவம் கொடுத்தவர்கள்

### ஜெயந்தன் படையணிக்கு கேணல் பானு பாராட்டு



(மட்டக்களப்பு)

நெருக்கடியான காலகட்டங்களில் தலைவரின் திட்டங்களுக்கு துணிவாக நின்று வெற்றிகரமாக செயல்வடிவம் கொடுத்தவர்கள் ஜெயந்தன் படையணி போராளிகள் என்று மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

ஜெயந்தன் படையணியின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜெயந்தன் படையணி முகாமில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜெயந்தன் படையணியின் பன்னி ரண்டாவது ஆண்டையொட்டி (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அதற்கு பூரண ஆதரவை வழுங்கத் தயார்

### உலக வங்கி வதிவிடப் பிரதிநிதி நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை உரு வாக்கினால் அதன் சகல நடவ டிக்கைக்கும் தேவையான பூரண ஆதரவை வழங்கத்தயாராக விருப்பதாக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதி நிதி பீற்றர் ஹெரால்ட் தெரி வித்துள்ளார்.

புத்தளத்திற்கு நேற்று விஜய மொன்றை மேற்கொண்டிருந்த அவர் அங்கு நடைபெற்ற கூட்ட மொன்றில் உரையாற்றும் போது இவ்வாறு கூறியுள்ளார்.

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கு நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலி களுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## -மட்டு-சிறைச்சாலையில்- உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளோர் நேற்று ஒன்பதாக அதிகரிப்பு!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கை நேற்று ஒன்பதாக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள ஐந்து விடுதலைப்புலிகளுடன் நேற்று மேலும் இரண்டு விடுதலைப்புலி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இணைந்துள்ளனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப் (12ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B),

(சி.11779)

## காணி விற்பனைக்குண்டு

இ-1542, நரசிங்கன் கோயிலடி, இரத்தினபுரம், கிளிநொச்சி. உரிமையாளர்-வீ.இராசம்மா. மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். (6098)

## விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் வீதியில் 7ஆம் வட்டாரம் சிவநகரில் அமைந்துள்ள தென்னை பிரயோசனங்கள் உடைய குடியிருப்புக் காணியில் 1/4 ஏக்கர்காணி விற்பனைக்குள்ளது. எடுக்க விரும்புவோர். காணியை நேரில் பார்த்து விலையைப் பேசிக்கொள்ளலாம். தொடர்புகொள்ளும் முகவரி. செ.அருளானந்தம், ராஜ்அழககம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

(5844)

## தவறிவிட்டது

அருமைநாதன் நித்தியமலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 565091719 V, பயண அனுமதி அட்டையுடன் வேறு பொருட்களும் முகமாலைக்கும் பளைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினிடம் ஒப்ப டைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(6102)

## தவறிவிட்டது

எனது ஒரு தொகைப்பணம் (சொப்பின்பையில்) கட்டியபடி 5.05.2005 அன்று முகமாலைக்கும் பரந்தன் சந்திக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்: ஜீ.ஜீவகுமார், மரக்கறி வாணிபம், பொதுச்சந்தை, கிளிநொச்சி.(11868)

## கண்டெடுப்பு


ஆனையிறவுக்கும் இயக்கச்சிக்கும் இடையே ஏ-9 வீதியில் கடந்த திங்களன்று பெரிய சூட்கேஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு பளை காவல்துறை பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சின்னத்துரை துரைசிங்கம் ஆனைக்கோட்டை என்பவரின் அந்தியேட்டி அழைப்பிதழ், பரமராஜ் வசந்தறோகினி என்பவரின் அடவு பற்றுச்சீட்டுக்கள் கிறடிற்காட், கடிகாரம் மற்றும் புடவைகளும் இதிலுள்ளன. உரியவர் பளை காவல்துறை பணிமனையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# தமிழீழ தேசத்தின் பொருண்மிய மேம்பாட்டிற்காக கல்விமான்களை உள்ளடக்கி ஆலோசனைக்குழு

போரியல் வல்லாதிக்கத்தினூடாக தமிழீழ தேசம் மலர்கையில் தமிழீழ பொருண்மியமும் தன்னிறைவாக மேம்பாடடைந்த, நிலையில் இருபபதற்கு வழிசெய்யும் வகையில் தமிழீழ தேசத்தின் வளர்ச்சியில் அக்கறையும், ஆர்வமும் கொண்ட கல்வி மான்களைக் கொண்டு, உருவாக்கம் பெற்ற ஆலோசனைக்குழுவின் அங்கு ரார்ப்பணச் செயலமர்வு த.பொ.மே நிறுவனத்தின் நடுவப்பணியக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக் கிழமை காலை 11.00 மணியளவில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

பல்கலைக்கழக விவசாய பீடபீடாதிபதி பேராசிரியர் இராசதுரை, பேராசிரியர் நவரட்ணராஜா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் தயாகுணரட்ணசிங்கம், பூநகரி பிரதேச செயலர் எஸ்.சிறீஸ்கந்தகுமார், சிரேஷ்ட விரிவுரையாளர் மிகுந்தன் ஆகியோரை உள்ளடக்கிய இக்குழுவினருடன் த.பொ.மே நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் நிறுவனத் துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணை நிறுவன நிதிப்பொறுப்பாளர் பொ.இந்திரன். நிறுவனத் திட்டமிடல் அலுவலர் சி.அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு நிறுவனத்தின் தேசிய கொள்கை திட்டமிடல் பற்றி விரிவாக ஆராய்ந்தனர்.





மின்னல் இராணுவ நடவடிக்கையின் போது 1991 ஆம் ஆண்டு விழுப்புண்ணடைந்து கடந்த மூன்றாம் திகதியன்று வீரச்சாவடைந்த மேஜர் குலம் அவர்களின் வித்துடல் கடந்த வியாழனன்று மக்களின் இறுதி வணக்கத்திற்காக எடுத்துவரப்பட்ட போது. (படம்:சசி)

# சமூக பொருளாதார அபிவிருத்திக்கான கடன்வழங்கும் நிகழ்வு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சமுதாய மீள்கட்டுமான திட்டத்தின்கீழ் (necord) பளைப்பிரதேசத்திலுள்ள கோயில்வயல் கிராமத்தில் கடன் வழங்கல்திட்ட நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் பளைப்பிரதேசத்திலுள்ள கோயில்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட இணைப்பாளர் ரவிக்காந் தலைமையில் இக்கடன் வழங்கல் நிகழ்வு இடம் பெற்றது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் அசோக்குமார், சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தலைவர் கைலாயபிள்ளை ஆகியோரின் மங்கல விளக்கேற்றலையடுத்து தேசியக்கொடி யேற்றப்பட்டது. தேசியக் கொடியினை அரசியல்துறை வலையப் பெறுப்பாளர் கதிரொளி ஏற்றி வைத்தார். இதைனைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. கிராமசேவையாளர் வல்லிபுரம், அசோக்குமார், திரு. கைலாயபிள்ளை ஆகியோர் சிறப்புரைகளையாற்றினர். இதனையடுத்து சமுகப்பொருளாதார ரீதியாக பின் தங்கிய நிலையிலும் தொழில் வாய்ப்பின்றியும் வாழ்ந்துவரும் குடும்பங்களைச் சார்ந்தவர்களுள் 22 பயனாளிகளுக்கு ஊக்கிவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டன.

சிறுவியாபாரங்கள் மேற்கொள்வதற்காக தலா 10,000 ரூபா வீதம் ஏழு பயனாளிகளுக்கும், மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதற்காக தலா 20,000 ரூபா வீதம் நான்கு பயனாளிகளுக்கும், மரக்கறி செய்கைகளை மேற்கொள்வதற்காக தலா 12,000 ரூபாவீதம் 10 பயனாளிகளுக்கும் விவசாயம் மேற்கொள்வதற்காக நீர் இறைக்கும் இயந்திரக் கொள்வனவுக் கடனாக 30,000 ரூபா ஒரு பயனாளிக்கும் என்ற அடிப்படையில் ஊக்கிவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதேசமட்டத்திலான பணியாளர் கௌரவிப்பும் பரிசு வழங்கலும்

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதேசமட்டத்திலான புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனங்களைச் சார்ந்த பணியாளர்களுக்கும் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தைச் சார்ந்த பணியாளர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வு கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழக (KDRRO) மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன், கிளிநொச்சி நகர கிராமசேவையாளர் இராஜேஸ்வரன் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலையடுத்து தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழகக் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. இதனையடுத்து ஆசியுரை, கருத்துரைகள் இடம்பெற்றன. ஆசியுரையினை கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை வழங்கியதைத் தொடர்ந்து, ரவிச்சந்திரன், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கெங்காதரன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி பூவிழி, கிராமசேவையாளர் இராஜேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

# வவுனியா மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வவுனியா மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர் வரும் 12 திகதி வவுனியா அரச அதிபர் எஸ்.சண்முகம் தலைமையில் அரச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்டத்தின் முதல் காலாண்டுக்குரிய வேலை திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது இந்தக் கூட்டத்தில் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாட் பதியூதீன், வடகிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளும் அதே சமயம் திணைக்கள தலைவர்கள் தமது செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிப்பார்கள். (21)

## மருத்துவ கருத்துரை

கிளிநொச்சி மருத்துவ சங்கங்களின் ஏற்பாட்டில் கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி எம். உமகாந்தன் அவர்களால் வன்னிப் பகுதியில் கடமையாற்றும் உதவி மற்றும் பதிவு வைத்திய அதிகாரிகளுக்கான மருத்துவ கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிளி. மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுமாறு உதவி மற்றும் பதிவு வைத்திய அதிகாரிகளை கிளிநொச்சி மருத்துவ சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

(11845)

## ஆதாரம் வெளிவந்தது

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் இதழின் 43ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இதில் பல படைப்பாளிகளின் ஆக்கங்கள் துறைசார்ந்தவர்களுடனான நேர்காணல்கள் வினாடிவினா மாணவர்களின் ஆக்கங்கள் உட்பட பல்சுவை அம்சங்களை தாங்கி வெளிவந்திருக்கிறது. இது ஆதாரத்தின் 43 ஆவது இதழ். (15)


## சுனாமி தாக்கத்தினால் இழந்த ஆவணங்களை மீளப்பெறல்

சுனாமி தாக்கத்தின்போது தமிழீழ மோட்டார் ஊர்தி ஆவணங்களை இழந்தவர்களின் நன்மை கருதி போக்குவரத்துக் கண்காணிப்பிரிவு முல்லைத்தீவு பிரதேச செயலகத்தில் மீளவும் 11.05.2005 ஆம் திகதி இயங்கவுள்ளதால் ஆவணங்களை இழந்தோர் குறிப்பிட்ட திகதியில் சென்று காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை தங்களது ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் மீளவும் அறியத்தருகின்றனர். இம்முயற்சிக்கு ஊர்தி உரிமையாளர்கள் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'நன்றி'

(சி.11846)

# பிரிட்டனில் தொழிற் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது



பாக்தாத்தில் பேரீஞ்சப் பழத் தோட்டத்தில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்ததையடுத்து வீடொன்றினை முற்று கையிட்டுள்ள அமெரிக்கப் படையினர்.

## மூன்றாவது முறையாக பிரதமராகிறார் பிளேயர்

(லண்டன்)

**இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் பிரதமர் டொனி பிளேயர் தலைமையிலான தொழில் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதனால் டொனி பிளேயர் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமராகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.**



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாவது பதவிக்காலத்திற்கென பிரிட்டிஷ் பிரதமமந்திரி டொனி பிளேயர் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய போதிலும், அவர் பாராளுமன்றத்தில் மிகக் குறைந்த பெரும்பான்மையே இம்முறை பெற்றுள்ளார்.

இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஒரே நாளில் தொடர்ச்சியாக 15 மணி நேரம் வாக்குப் பதிவு நடந்தது. நாலு கோடியே 41 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இந்த வாக்குப்பதிவில் ஈடுபட்டனர். 60 இலட்சம் பேர் தபால் மூலம் வாக்குப் பதிவு செய தனர். வாக்குப் பதிவு முடிந்ததும் நேற்று மாலையே வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்தத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சிக்கும், எதிர்க்கட்சியான கன்சர்வெடிவ் கட்சிக்கும் இடையே கடும் போட்டி இருந்தது.

எனினும் இத் தேர்தலில் பிரதமர் டொனி பிளேயர் மீண்டும் வெற்றி பெறுவார் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தன.

தற்போது சில தேர்தல் முடிவுகள் மட்டுமே வெளியாகவேண்டிய நிலையில் தொழில் கட்சி வெற்றி பெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

ஆயினும் அதன் பெரும்பான்மை கடந்த முறையை விட வெகுவாகக் குறைந்துள்ளதாகவும், சுமார் நூறு ஆசனங்கள் வரையில் கடந்த முறை தேர்தலை விட தொழிற் கட்சி இழந்திருப்பது பிளேயருக்கு பின்னடைவாக அமைந்துள்ளது எனக் கருதப்படுகின்றது.

ஆயினும் தொழிலாளர் கட்சி மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடித்தது. டொனி பிளேயர் மூன்றாவது முறையாக பிரதமரானார். இந்த சாதனை வெற்றியைத் தொடர்ந்து டொனி பிளேருயர் தனது மனையி செரி பிளேடன் பொது மக்கள் முன்னிலையில் தோன்றி நாட்டு மக்களிடம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இவரது இந்த வெற்றியை அடுத்து எதிர்க் கட்சியான கன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவர் மைக்கேல் ஹவாட் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகப் போவதாகக் கூறியுள்ளார்.

ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தினை இணைந்து நடத்திய மூன்று நாடுகளின் தலைவர்களான அமெரிக்காவின் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவுஸ்திரேலியாவின் ஜோர்ஹவாட் ஆகியோரை அடுத்து பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயரும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை அறிவிக்கப்பட்ட வாக்குகளில் 36 சதவீத வாக்குகளை மாத்திரமே தொழில் கட்சி பெற்றுள்ளது. இது வரை நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்ற ஒரு கட்சிக்குக் கிடைத்த ஆகக் குறைந்த வாக்கு இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் டொனிபிளேயரின் சட்ட வாக்கு நடவடிக்கைகளில் பின்னடைவு காணப்படும் எனவும் கூறப்படுகின்றது.

## ஈராக்கில் நேற்றும் குண்டு வெடிப்பு ஏழு ஈராக்கியப் பொலிசார் பலி

ஈராக்கின் டிக்ரிட் நகரில் நடந்த குண்டு வெடிப்பில் ஏழு ஈராக்கிய பொலிசார் கொல்லபட்டனர். அத்துடன் மேலும் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது கடந்த ஏப்ரலில் ஈராக்கின் இடைக்கால அரசாங்கம் ஏற் படுத்தப்பட்ட பின்னர் அங்கு பல வன் முறைகள் இடம்பெற்று வருவதாகவும், நேற்றைய சம்பவமும் அதன் தொடர்ச்சியா எனவும் கூறப்படுகின்றது. இடைக்கால சபை அங்கு ஏற்படுத்தப்பட்ட போதும் பாதுகாப்பு மற்றும் எாிபொருள் உற்பத்திக்கு பொறுப்பான பதவிகள இன்னும் வெற்றிடமாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் இப்ராகிம் ஜபாரி சுனி முஸ்லிம்களை அரசின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர முயற்சித்த போதிலும், அவர்கள் மீது தேடுதல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. மேற்படி சம்பவமும் தேடுதல் நடவடிக்கையின் போதே நிகழ்ந்ததாகும்.




பாக்தாத்திற்கு தெற்கேயுள்ள நஜாப் நகரில் தமது கொடுப்பனவுகளைக் கோரி நகர மேயரின் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தும் ஈராக்கியப் பொலிசார்.

## பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு அமெரிக்க சனாதிபதி புஷ் பாராட்டு

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் அல்-ஹைய்தா தலைவர் அபுபராராஜ் அல்லிப்பியைக் கைது செய்ததற்காக அமெரிக்க சனாதிபதி பாகிஸ்தானுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

“பின்லேடனின் தளபதியாக இருக்கும் அல்லிப்பி அந்த இயக்கத்திற்காக நிதி திரட்டிய பல்வேறு சதித் திட்டங்களைத் தீட்டிய அமெரிக்காவுக்கு மிகப் பெரிய எதிரியாக இருந்த அவரைக் கைது செய்து இருப்பது பாராட்டுக்குரியது. கிடைத்த உளவுத் தகவல் மூலம் செயற்பட்டு அவரை கைது செய்ததற்காக பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை பாராட்டுகிறேன். அல்-ஹைய்தா முற்றிலுமாக ஒடுக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என புஷ் தெரிவித்தார். அல்-ஹைய்தா இயக்கத் தலைவர்களில் நான்கில் மூன்று பங்கினர் கைது செய்யப்பட்டுவிட்டதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார். “அல்லிப்பியைப் பிடித்து இருப்பது அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் தரும் ஒத்துழைப் பின் அடையாளமாகும். இது மிகப் பெரிய திருப்புமுனை” என்றும் அந்த அதிகாரி கூறினார்.



ஜோர்தானின் அம்மானில் நடைபெற்ற சர்வதேச நிகழ்வு ஒன்றில் சாகசத்தில் ஈடுபட்ட ஜோர்தானின் றோயஸ்போல்கன் விமானப் படை விமானங்கள்.

## ஈராக்கில் துப்பாக்கிச்சூடு, குண்டுவெடிப்பு ஒன்பது பொலிசார் உட்பட 25 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினம் நடந்த குண்டுவெடிப்பில் ஒன்பது பொலிசார் உட்பட 25 பேர் கொல்லப்பட்டனர். ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ச்சிக்கு பின் கார்க் குண்டு வெடிப்புக்கள் தினசரி நிகழ்ச்சியாகி விட்டன. அர்பில் நகரில் கடந்த புதனன்று கார்க்குண்டு வெடித்ததில் 60 பேர் பலியாகினர். இந்நிலையில் நேற்று முன்தினம் நான்கு இடங்களில் தாக்குதல் நடந்தது. இதன் போது 25 பேர் பலியாகினர்.

பாக்தாத்தின் தெற்கு பகுதியில் துப்பாக்கியுடன் நுழைந்த தீவிரவாதிகள் இரண்டு பொலிஸ் வாகனத்தின் மீது கண்முடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் ஆறு பொலிசார் கொல்லப் பட்டனர். அவர்களுடைய கார்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. பாக்தாத்தின் கிழக்குப் பகுதியில் சென்ற பொலிஸ் வாகனத்தின் மீது மற்றொரு தாக்குதலை தொடர்ந்த தீவிரவாதிகள் மூன்று பொலிசாரை சுட்டுக் கொன்று அவர்களது வாகனங்களையும் எரித்தனர்.

இதேவேளை, பாக்தாத்திலுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் அருகே கார்க்குண்டு வெடித்ததில் ஒரு பாது காவலர் பலியானார், ஆறு பேர் படுகாயமடைந்தனர். பாக்தாத்தின்



பழைய முத்தன்னா விமான நிலைத்தில் தற்கொலை படையினர் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் 15 பேர் பலியாகினர் எத்தனை பேர் காயமடைந்தனர் என்ற விவரம் தெரிய வரவில்லை.




அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் அபு கிராய் சிறைச்சாலை கொமாண்டரான பிரிகேடியரை பதவி நீக்கம் செய்துள்ள நிலையில் அந்தச் சிறைச் சாலையில் “கடவுளே என் னைக் காப்பாற்று என எழுதப்பட்ட வாசகம்.

## வியட்நாம் பிரதமர் அமெரிக்கா பயணம்

வியட்நாம் பிரதமர் பான் வான் காய் அடுத்த மாதம் (ஜுன்) அமெரிக்கா செல்லவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

வியட்நாம் யுத்தம் முடிந்த 30 ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது தான் முதல் முறையாக அந்த நாட்டின் தலைவர் அமெரிக்கா செல்ல இருக்கிறார். அமெரிக்காவுடன் உள்ள உறவை வலுப்படுத்திக் கொள்வதற்காக அந்த நாட்டுக்குச் செல்ல இருப்பதாகவும் அதே நேரத்தில சீனாவுடன் உள்ள உறவு பாதிக்கப்படாமலும் பார்த்துக் கொள்வோம் என்றும் பான்வான் காய் கூறினார்.

## நிவாரண நிதியை சுருட்டினார்; நேபாள பிரதமர் மீது குற்றச்சாட்டு



நிவாரண நிதியை கையகப் படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நேபாள பிரதமர் மீண்டும் கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேபாளத்தில் பிரதமர் ஷேர் பகதூர் துபா தலைமையிலான அரசை மன்னர் ஞானேந்திரா கடந்த பெப்ரவரி மாதம் கலைத்தார். இதைத் தொடர்ந்து அங்கு மன்னர் தலைமையில் புதிய இடைக்கால அரசு பதவியேற்றது. கடந்த மூன்று மாதங்களாக அங்கு நெருக்கடி நிலை அமுல்ப்படுத்தப்பட்டது.

அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். நெருக்கடி நிலை இப்போது விலக்கிக் கொள்ளப்பட்டாலும், முக்கிய தலைவர்கள் இன்னும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பிரதமர் ஷேர் பகதூர் துபா உட்பட ஒருசில தலைவர்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் ஷேர் பகதூர் பிரதமராக இருந்தபோது பிரதமரின் நிவாரண நிதியை அவர் தவறாக பயன்படுத்தியதாகவும் கோடிக்கணக்கான ரூபாயை அவர் சுருட்டியதாகவும் புகார் கூறப்பட்டது. இது பற்றி ஊழல் தடுப்பு ஆணையம் விசாரணை நடத்தியது. இதில் கோடிக்கணக்கான ரூபாயை அவர் சுருட்டி விட்டதாக ஊழல் தடுப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் அவர் மீது ஊழல் வழக்குத் தொடரவும் நேபாள அரசு முடிவு செய்துள்ளது. துபா இது தொடர்பாக மீண்டும் கைது செய்யப்படுவாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக
# இரு மாணவர் இல்லங்கள் திறந்துவைப்பு

**தங்களது கல்வியைத் தொடரமுடியாது மிகவும் பின்தங்கியநிலையிலுள்ள மாணவர்களின் எதிர்கால நலன்கருதி இரு மாணவர் இல்லங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் மல்லாவிப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள யோகபுரம் மல்லாவியில் முற்பகல் 11.00 மணியளவில் மாணவர்களுக்கான "மாறன்" ஆண்கள் இல்லம் ஒன்றும், நண்பகல் 12.00 மணியளவில் மாணவிகளுக்கான "சாந்தி" பெண்கள் இல்லம் ஒன்றுமாக இருவன நிர்வாக அனுசரணையுடன் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்துவருகின்ற மாணவர்களினதும், பெற்றோர்களை, பாதுகாவலர்களை இழந்து தங்களது கல்வியைத் தொடர கற்க முடியாது பல சிரமங்களை எதிர்நோக்கிவந்த மாணவர்களினதும் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டே இவ்விரு இல்லங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.மாணவ, மாணவியர்கள் இல்லங்களிலிருந்து பாடசாலைகளுக்கும் ஏனைய கல்வி





இல்லங்கள் பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழக தொடர்நிதிப்பங்களிப்பின் கீழ் தமிழீழ மாணவர் அமைப்பின் இளையோர் திறன்விருத்தி நிறுமுடியாத மாணவர்களினதும், போக்குவரத்துப் பாதைகள் சீரின்மையாலும், போக்குவரத்து வசதிகளின்றியும், தூர இடங்களிலிருந்து கல்வி நிலையங்களுக்கும் சென்றுவருவதற்காக துவிச்சக்கரவண்டிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளி.மகாவித்தியாலயத்திற்கு பழையமாணவியால்
# விளையாட்டு மைதானத்திற்காக காணி கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்திற்காக காணி ஒன்றினை அப்பாடசாலையின் பழையமாணவியும், தற்போது



அமெரிக்காவில் வசித்துவருபவருமாகிய சியாமளா கந்தசாமி அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேற்படி மைதான காணி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கிளி/மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் பாடசாலை முதல்வர் வ.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை பாடசாலை முதல்வர் ஏற்றிவைத்தார்.

அடுத்து மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ப.மார்க்கண்டு, கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி. இ.அரியரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரையான காலப்பகுதியில் இருந்துவரும் குறைபாடுகள் பற்றி தலைமையுரையில் பாடசாலை முதல்வர் தெரிவித்தார்.

தலைமையுரையினை அடுத்து வெ.இளங்குமரன் காணியை வழங்கிய சியாமளா கந்தசாமி மற்றும் கந்தசாமி வரதன் ஆகியோரை வாழ்த்தி உரையாற்றினார்.

சிறப்புரையினை நிகழ்த்திய அரசாங்க அதிபர் காணிப் பத்திரத்தினை சியாமளாவின் சகோதரனான கந்தசாமி வரதனிடம் இருந்து பெற்று பிரதி அதிபர் அ.பங்கயச்செல்வனிடம் கையளித்தார்.

விளையாட்டு மைதானத்தை மனமுவந்து கையளித்த பழையமாணவிக்கு பாராட்டுத் தெரிவிக்கும் முகமாக வாழ்த்து மடல் ஒன்றினையும் பாடசாலை சமூகம் அவர்களுக்கு வழங்கியுள்ளது. அதன் வாழ்த்துப் பாவினை ஆசிரியர் பகீரதி வசித்தளிக்க, அதனை பாடசாலையில் நீண்டகாலமாக கற்பித்துவரும் ஆசிரியர் விநாயகமூர்த்தி அவர்கள் கந்தசாமிவரதனிடம் கையளித்தார்.

பதிலுரையினை வரதன் நிகழ்த்தினார். நன்றியுரையினை பிரதி அதிபர் அ.பங்கயச்செல்வன் நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்விற்கு கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் க.கணேசபிள்ளை, கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனையின் அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (கு,ச)

# சைவ நெறித் தேர்வு

சைவப்பரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் சைவ நெறித்தேர்வு இவ்வருடம் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி நடைபெறும. தரம் 02 முதல் 12 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் இத் தேர்வுக்குத்தோற்றலாம். சென்றவருடம் தேர்வுக்கு தோற்றிய பாடசாலைகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்காத பாடசாலைகளும் சென்ற வருடம் தேர்வுக்கு விண்ணபிக்காத பாடசாலைகளும் பரீட்சை செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். எனவும் விண்ணப்ப முடிவுத்திகதி 31.05.2005 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான
# பொதுஅறிவுத் திறன் பரீட்சை இன்று

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையத்தின் பத்தாம் ஆண்டு நிறைவும் அதனை முன்னிட்டு 2005 ஆம் ஆண்டுக்கான முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொது அறிவுத்திறன் பரீட்சையும் இடம்பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த அனுசரணையின்கீழ் வடகிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினூடாக நடாத்தப்படவிருக்கும் இப்பரீட்சையானது வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் தமிழ், சிங்களப் பிரிவுகள் உள்ளடங்கலாக அனைத்துப் பிரதேசங்களிலும் இன்று முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணி வரை இடம்பெறவிருக்கிறது. இப்பரீட்சையில் அனைத்து ஆசிரியர்களும் தோற்றவுள்ளனர்.

முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளை மென் மேலும விருத்திசெய்து, முன்பள்ளிச் சிறார்களின் கல்விவளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு நடாத்தப்படவிருக்கும் இப்பரீட்சைக்கு டென்மார்க் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சியிலுள்ள கண்ணிவெடி அகற்றும் பிரிவும் ஆதரவு நல்கவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கடமைக்குப் பிந்தி வந்ததன் காரணமாக
# சிற்றூழியர் இருவருக்கிடையில் மோதல்

## -ஒருவர் காயம்

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை இரண்டு சிற்றூழியர் மத்தியில் ஏற்பட்ட வாக்குவாதம் இருவருக்கிடையில் கைகலப்பாக மாறியதில் ஒருவர் பலத்த காயத்திற்குட்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்; இரு சிற்றூழியரில் ஒருவர் கடமைக்குப்பிந்தி வந்ததாகவும், மற்றவர் ஏன் பிந்தி வந்தாய் எனக் கேட்டபோதே தான் இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளார். (18)

# மருதங்கேணிப் பிரதேசத்தில்
# பல்திறன் பயிற்சி நிலையம்

(அலுவலக செய்தியாளர்)

உலக கனேடியப் பல்கலைக்கழக சேவை நிறுவனமும், கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வுஅபிவிருத்தி நிறுவனம் (**REEDO**) மும் இணைந்து வடமராட்சிகிழக்கு மருதங்கேணிப்பகுதியில் பல்திறன் பயிற்சி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது முதலில் தமிழீழ தேசியக்கொடியை திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் றஞ்சன் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கினை வூஸ்க் பிரதி, வெளிக்களப் பணிப்பாளர் போல்டெல்விசன், வூஸ்க் வடமாகாணப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நிலவன், வடமராட்சிகிழக்கு செயலணிப் பணிப்பாளர் சுடர்மணி, சுனாமி வேலைத்திட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் வின்சன், சமாதான நீதவான் தியாகராஜா ஆகியோர் ஏற்றி வைக்க, பயிற்சிநிலையப் பெயர்ப் பலகையினை வூஸ்க் பிரதி வெளிக்களப்பணிப்பாளர் போல்டெல் விசன் திரைநீக்கம் செய்து வைத்தார். பயிற்சி நிலைய மண்டபத்தினைத் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து வீட்டு மின்னிணைப்புப் பயிற்சிநெறி வடமராட்சிக்கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அவர்களால் மின்குமிழினை ஒளிரச் செய்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது வூஸ்க் பிரதி வெளிக்களப் பணிப்பாளர் போல்டென் விசன், ஜெயராஜசிங்கம், ஜெயசீலன், திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் ரஞ்சன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன், சுனாமி வேலைத்திட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் வின்சன், அரசசெயலர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (சோ,கு)

# போரூட் நிதியுதவியுடன் நெடுங்கேணியில்
# முன்பள்ளிக் கட்டடம் திறந்து வைப்பு

வவுனியா மாவட்ட நெடுங்கேணி சன்னாசி பரந்தன் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்று நேற்று முன்தின[illegible] றந்துவைக்கப்பட்டுள்ளது.

போ[illegible] றுவன நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக்[illegible] கத்தின் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளி கட்டடத்திறப்புவிழா நிகழ்வானது, அதன் இணைப்பாளர் குமாரசாமி அவர்கள் தலைமையில் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் பரமசாமி, போரூட்திட்ட இணைபாளர் சிவபாலன், பெண்கள் அபிவிருத்திச் சங்கத் தலைவி விஜயலக்சுமி, கிராம அலுவலர் மரியசீலன் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றப்பட்டதையடுத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனக்கொடி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடி, விண்ணகச்செல்வன் முன்பள்ளிக் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. சன்னாசி பரந்தன் கிராமமானது போர்ச்சூழல் காரணமாகவும், சமூக பொருளாதாரரீதியாகவும், மிகவும் பின்தங்கியநிலையிலுள்ள ஒரு கிராமமாகும். அங்குள்ள சிறுவர்களின் கல்விநிலையானது மிகமோசமாகப் பின்தங்கிக் காணப்பட்டதையடுத்து, வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஊடாக விண்ணகச் செல்வன் முன்பள்ளிக் கட்டடம் ஒன்றினை திறந்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த முன்பள்ளித் திறப்புவிழா நிகழ்வில் பிரதான பெயர்ப்பலகையினை வவுனியா மாவட்ட டென்மார்க் அகதிகள் புனர்வாழ்வுப் பேரவைத் (**DRC**) திட்டமிடல் அலுவலர் செந்தூரன் திரைநீக்கம் செய்துவைத்தார். இதனையடுத்து கல்வெட்டினை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளர் சதானந்தன் திரைநீக்கம் செய்துவைக்க, முன்பள்ளிக்கான புதிய கட்டடத்தினை போரூட் நிறுவன வதிவிடப் பிரதிநிதி கௌறிக்லேன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இதனைத்தொடர்ந்து தலைமையுரை, வரவேற்புரை, சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன. வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர், போரூட் வதிவிடப் பிரதிநிதி, வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், டென்மார்க் அகதிகள் பேரவைப் பிரதிநிதி, போரூட் திட்ட முகாமையாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர். கிராம மக்கள் சார்பில் இராசேந்திரம் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டதையடுத்து இனிது நிறைவேறிய அன்றைய இந்த முன்பள்ளித் திறப்புவிழாவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் உட்பட சமூக ஆர்வலர்கள், போராளிகள், பொதுமக்களெனப் பெரும்பாலானோர் கலந்துசிறப்பித்தனர். (கு)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைக்கணிப்பீடு

## த.பு.கழகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைக்கணிப்பீட்டு நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியம் தேவையானவற்றை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இத்தேவைக்கணிப்பீட்டு நடவடிக்கைகளை யாழ். வடமராட்சிப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (33)

## யாழ். ஊடகவியலாளர் சங்கத்தால்

# சிவராம் படுகொலையை கண்டித்து 'சவப்பெட்டி' எதிர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் டி.சிவராம் (தராகி) அவர்களின் படுகொலையைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக யாழ்ப்பாண ஊடகவியலாளர் இன்று நடத்தப்படவுள்ள சவப்பெட்டி எதிர்ப்பு போராட்டத்திற்கு யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் தனது ஆதரவை தெரிவித்துள்ளதுடன், இப்போராட்டத்தின் முடிவில் ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனானுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பிவைக்கவும் ஏற்பாடகியுள்ளது.

## நான்காண்டு திட்டத்தில்

# மேசன், தச்சு தொழில் பயிற்ச்சி

யாழ்.மாவட்டத்தில் மேசன், தச்சு தொழிலாளர்களுக்கான பயிற்சித் திட்டம் ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

நான்கு வருடகாலத்தை உள்ளடக்கியதான இத்திட்டத்தில் இவ் வருடம் மேசன் பயிற்சிக்காக இரு நூற்றி தொண்ணூற்று நான்கு பேரும், தச்சு தொழில் பயிற்சிக்காக நூற்றி நாற்பத்து நான்கு பேரும் தெரிவு செய்யப படவுள்ளனர்.இதற்கான பயிற்சிநெறி யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பயிற்சிக்காலங்களில் மாணவர்களுக்கு சிறுகொடுப்பனவும் வழங்கப்படும் (சு)

# அரசின் நிவாரண நிறுத்தத்தால் யாழில் 25 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(நல்லூர்)

**அரசின் இடம் பெயர்ந்தோர்களுக்கான நிவாரண நிறுத்தம் காரணமாக யாழ். குடாநாட்டில் சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் நிர்க்கதியான நிலைமைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளார்கள்.**

குடும்பத்தலைவரை இழந்தும் உழைப்பாளர்களையும் இழந்து பிள்ளைகளுடனும் தனிமையாகவும் இருக்கும் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களே இத்தகைய நிர்க்கதியான நிலமையில் உள்ளார்கள் .

பொதுன மாதாந்த உதவிப் பணத்தை பெறும் இக்குடும்பங்களுக்கு தனிநபராக இருந்தால் 100 ரூபாவும் மற்றும் ஆட்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆகக்கூடிய தொகையாக 280 ரூபாமட்டுமே வழங்கப்படுகின்றது.

உழைப்பாளர்கள் இல்லாத வறுமையான குடும்பங்களை கருத்தில் கொள்ளாமல் நிவாரணம் நிறுத்தப்பட்டமையால் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

95 ஆம் ஆண்டுக்கு முன்னர் வறுமை நிவாரண முத்திரையாகவும் ஒரு தொகைப்பணம் வழங்கப்பட்டது தற்போது அந்தத் தொகையும் கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்(41)

# தென்மராட்சியில் வைரஸ்காய்ச்சல் முன்னெச்சரிக்கையாக இருக்குக!

## சாவகச்சேரி மருத்துவமனை தலைமை மருத்துவர் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களாக ஒரு வகை வைரஸ் காய்ச்சல் வேகமாக பரவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் காய்ச்சலால் பாதிக்கப்படும் நோயாளர் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பொது மக்கள் சுகாதார வழிமுறைகளை களை பின்பற்றும் படியும் மற்றும் குளிர்பானங்கள் ,ஐஸ்கீறிம் முதலான குளிர் பதார்த்தங்ளை உண்பதில் மக்கள் முன் எச்சரிக்கையுடன் இருப்பதுடன் சன நெருக்கடி மிகுந்த இடங்களில் இந்த நோய் பரவும் என்பதால் மக்கள் இவற்றை தவிர்த்து தம்மை நோய்களில் இருந்து பாதுகாக்கும் படி சாவகச்சேரி நகர மருத்துவமனையின் தலைமை மருத்துவர் அம்பிகைபாகன் கேட்டுக் கொண்டுள்ளார். (28)

# மிதிவெடிகள் அகற்றப்பட்ட பகுதி மக்களிடம் கையளிப்பு

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட மிதிவெடி அகற்றப்பட்ட நிலப்பரப்பு கோப்பாய் பிரதேச செயலரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பத்தாயிரத்து எழுநூறு சதுர மீற்றர் பரப்பளவுடைய நிலப்பரப்புகள் கலோரெஸ்ற் நிறுவனத்தினரால் மிதிவெடிஅகற்றப்பட்டு மாவட்ட மிதிவெடி அகற்றும் செயற்பாட்டு செயலகத்து நடவடிக்கை பகுதியை சேர்ந்த செ.டெனிசன் அவர்களால் மக்கள் பாவனைக்காக கோப்பாய் பிரதேச செயலரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது இந்நிலப்பரப்பினுள் ஐந்நூற்றி நாற்பத்தி நான்கு மிதிவெடிகளும் ஒரு கைக்குண்டும் அகற்றப்பட்டுள்ளது. (சு)

# நாட்டுப்பற்றாளர் குலசேகரத்தின் இறுதி வணக்க நிகழ்வு யாழ். உரும்பிராயில் இடம் பெற்றது

(நல்லூர்)

விடுதலைப்புகளால் நாட்டுப்பற்றாளராக அறிவிக்கப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த கந்தையா குலசேகரத்தின் இறுதிக் கிரியை நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இருந்தே பெரும் பங்களிப்பை வழங்கிய இவர் கடந்த புதனன்று சாவடைந்தார்.

இவரின் அஞ்சலி நிகழ்வுகள் உரும்பிராய் தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நேற்று முன்தினம் ஓய்வு பெற்ற அதிபர் பஞ்சாட்சரம் தலைமையில் இடம் பெற்றது.

பகல் 11.30 மணிக்கு இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ் மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஏற்றி வைத்தார்

ஈகச்சுடரினை அன்னாரின் துணைவியாரும் மற்றும் மாவீரர் அருச்சுனாவின் தந்தையார் சதாசிவமும் ஏற்றிவைத்தார்கள் .

இறுதி அஞ்சலி உரைகளை தமிழீழ விளையாட்டுத் துறை தலைவர் க. பத்மநாதன், வலிகாமம் கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சோ.கிருஷ்ணராசா, கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ந.சிவகடாட்சம், யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் பொருளாளர் க.சிவராசா மற்றும் யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் நிகழ்த்தினர்.

பிற்பகல் 2.00 மணியளவில் ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட புகழுடல் உரும்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (41)

# வல்லைப்பாலம் பாவனைக்கு தடை

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் ஒன்பதாம் திகதி முதல் வல்லைப்பாலம் மக்கள் பாவனைக்குதடை செய்யப்படவுள்ளது.

மேற்படி பாலத்தில் திருத்த வேலைகாரணமாகவே மக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்படுகிறது் இதற்குப்பதிலாக மக்கள் போக்குவரத்துத் தேவையினைக் கருத்தில் கொண்டு பதில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இப்பதில் பாதையூடாக போக்குவரத்து சேவை ஈடுபடுகின்ற பேருந்து சிற்றூர்திகள் இப்பாதையின் ஆரம்பப்பகுதிகளில் பயணிகளை இறக்கிவிட்டு இப்பாதையூடாகச் சென்று பிரதான பாதையில் ஏற்றிச்செல்லலாம். பாரஊர்திகள் முற்றாகத்தடை செய்யப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிததுள்ளனர் (சு)

## மீன்பிடியியல் டிப்ளோமா

# வேலையற்ற பட்டதாரிகளின் நிர்வாகம் தெரிவு

யாழ்.வேலையற்ற மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகளின் சங்கநிர்வாகத் தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் மு.ப 10மணிக்கு இடம் பெற்றது. இக்கூட்டத்தில் முன்னைய நிர்வாகிகளுக்கு அவர்களின் சிறப்பான பணியை பாராட்டியதுடன் புதியநிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர் சங்கத்தின் புதிய தலைவராக கிருஷ்ணானந்தன் பிருந்தாபனும் செயலாளராக மயில்வாகனம்,யுவனதாஸ்சும், பொருளாளராக தவம், தவநிலவின் தாஸனும் தெரிவு செய்யப்பட்டனர் இதனைத் தொடர்ந்து சங்கத்தின் எதிர்கால திட்டங்கள் பற்றிகருத்துப்பரிமாற்றம் நடைபெற்றது. (28)

# குடிசார் உத்தியோகஸ்த்தர்கள் பற்றாக்குறையால் மதிப்பீட்டு பணிகளை ஸ்தம்பிதம்

(நல்லூர்)

யாழ் குடாநாட்டில் குடிசார் தொழில்நுட்ப உத்தியோகஸ்த்தர்களுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக உலக வங்கியின் வீட்டுத்திட்ட வேலைகளை மதிப்பீடு செய்யும் பணியில் தாமதங்கள் காணப்படுகின்றன.

உலக வங்கியின் ஐந்தாண்டுத்திட்டத்தில் வீடமைக்கும் செயல்பாடுகள் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக பிரதேச செயலாளர் உதவி அரசாங்க அதிபர் பகுதிகள் ரீதியாக வீடுகளை பார்வையிட்டு சேதங்களை மதிப்பீடு செய்யும் பணிகள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகிறது.

எனினும் போதியளவு குடிசார் தொழிநுட்ப உத்தியோகஸ்த்தர் இன்மையால் இப்பணிகள் மந்தகதியிலேயே நடைபெறுகிறது. (41)

# காசநோய் தடுப்புத்திட்டம் யாழ். குடாநாட்டில் அமுல்

யாழ்.குடாநாட்டில் காசநோய்ப் பரம்பலை கட்டுப்படுத்துவதற்காக "டொட்ஸ்" என்ற காசநோய் தடுப்புத் திட்டம் யாழ்.குடாநாட்டிலும் அமுல் செய்யப்படவுள்ளது.

சர்வதேச ரீதியில் 185 நாடுகளிலும் இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களுள் 21 மாவட்டங்களிலும் அமுலிலுள்ள இத்திட்டமானது இம்மாதம் முதல் யாழ்.மாவட்டத்திலும் முதல் முறையாக அமுல் படுத்தப்படுகிறது.

காசநோய்த் தாக்கத்துக்கு இலக்கானவரை இரண்டு மாத காலத்துள் குணப்படுத்தும் இத்திட்டத்தில் நோயாளரின் மருந்துப் பாவனையை நேரடியாகக் கண்காணித்து அவரைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தாது போதியளவு சிகிச்சைகளை வழங்கி அவரை நோய்த்தாக்கதிலிருந்து விடுவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டத்தில் செயற்படவுள்ள வைத்தியர்கள், தாதியர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள் போன்றோருக்கான பயிற்சிகளை தேசிய புற்றுநோய்த்தடுப்பு இயக்கம் வழங்கியுள்ளது.

இந்த நேரடிச்சிகிச்சை முறைகள் நோயாளிகள் இலகுவாகப்பயனடையக் கூடியவாறு நோயாளர்கள் வாழும் பிரதேசத்திலுள்ள வைத்திய சாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களூடாக வழங்கப்படும் என பிரதி மாகாண தலைமை அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.(33)

# உலகவங்கியின் நிதி உதவியுடன் 1000 வீட்டுத்திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

உலகவங்கியின் உதவியுடன் வடகிழக்கு வீடமைப்பு புனர்நிர்மானதிட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் ஆயிரம் வீடு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் யுத்ததினால் பாதிக்கப்பட்ட பதின்நான்கு பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு மணற்காட்டிலும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்காக படிவங்கள் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இப்படிவங்களில் இருந்து ஆயிரம் பயனாளிகள் தெரிவுசெய்யப்படுவர். இதில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுள் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கு குறைந்த மாத வருமானம் உடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருமான எல்லை இல்லை. ஆயினும் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். மற்றும் காணி உரிமையாளராகவும் இருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. (சு)

# வாழைச் செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வாழைக்கிழங்கு நீள் மூஞ்சிவண்டு

வாழைச் செய்கையில் கூடு தலான பொருளாதார சேதத்தை ஏற்படுத்துவது வாழைக் கிழங்கு நீள்மூஞ்சி வண்டு ஆகும்

**தாக்கம**


குடம்பிகள் கிழங்கில் சுரங் கங்களை அமைத்து உணவு உண்பதால் கிழங்குகள் வீணாகுவதே பிரதானதாக்கமாகும். தாக்கப்பட்ட கிழங்கிலிருந்து உருவாகும் உறுஞ்சிகள் வாடி இறந்தது போன்று தோற்றமளிக்கும். பெரிய மரங்களின் வளர்ச்சி தடைப்படும். காற்று வீசும்போது பாதிக்கப்பட்ட மரம்முறிந்து விழலாம்.

**நிறையுடலி (தாய்ப்பருவம்)**

10 மில்லிமீற்றர் வரை நீளமானஉடலைக் கொண்ட, நீண்டவளைந்த மூஞ்சியைக் கொண்ட , இரவில் வெளியே வரும் ஒரு வண்டாகும். இவை அரிதாகவே பறக்கும். ஒரு வருடத்திற்கு மேல் உயிர் வாழக் கூடியது. உணவில்லாது இவ் வண்டு 6 மாதங்கள் வரைஉயிர் வாழும்.

**முட்டை**

வாழையின் தண்டுக் கிழ




ங்கை மண் மட்டத்தில் முதிர்ச்சியடைந்த பெண் வண்டு கடித்து அதில் அடைகாப்பதற்கான துளைகளை ஏற்படுத்தும். இத்துளைகளில் ஒவ்வொரு முட்டையாக இடும். மழை காலத்தில் அதிகளவான முட்டைகளை இடும். நிலவும் வெப்பநிலைக்குஏற்ப முட்டைகள் 5-8 நாட்களில் பொரிக்கும். ஒரு பெண்வண்டு தனது வாழ்க்கைக்காலத்தில் 100 முட்டைகளை இடும் வல்லமை கொண்டது. ஆனால் பொதுவாக இவை 50 முட்டைகளையே இடும.

**குடம்பி**

முட்டை பொரித்து வெளியேறும் குடம்பிகள் வாழைக் கிழங்குகளில் சுரங்கங்களை அமைத்து கிழங்குகளை உணவாகக் கொள்ளும். இக்குடம்பி வெண்ணிறமான உடலையும் கபில நிறமான தலையையும் கொண்டிருக்கும். கால்கள் காணப்படமாட்டாது. குடம்பிப் பருவம் 14-21 நாட்களாகும்.

**கூட்டுப்புழு**

வாழைக் கிழங்கின் மேற்பரப்



பிற்கு அண்மையிலுள்ள ஒரு பிரதேசத்தில் கூட்டுப்புழுப் பருவத்தைக் கழிக்கும். இதற்கு 7-10 நாட்கள் எடுக்கும். வெண்ணிறமான கூட்டுப்புழு 12 மில்லி மீற்றர் நீளமானதாகும்.

## வாழைச் செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வாழைத்தண்டு வண்டு

வாழைக் கிழங்கு நீள் மூஞ்சி வண்டுகளின் தாக்கம் பரவ லாகக் காணப்படும் பிரதேசங்களில் வாழைத்தண்டு வண்டுகளையும் அவதானிக்கலாம்.

**தாக்கம்**

குடம்பிகள் தண்டில் சுரங்கம் அமைப்பதால் அவை பாதிக்கப்படும்.இதனால் போலித்தண்டு (வாழைத்தண்டு) இலகுவில் முறியலாம்.

**நிறையுடலி(தாய்ப்பருவம்)**

இது தோற்றத்தில் வாழைக் கிழங்கு நீள்மூஞ்சி வண்டை ஒத்திருக்கும். ஆனால் அதனை விட ஓரளவு பெரியது. 18.மில்லி மீற்றர் வரை நீளமானது. இவ்வண்டு முற்றாகக் கறுப்புநிறமானது ஆனால் சில வண்டுகள் கபில, சிவப்பு நிறமானவை. இவ்வண்டுகள் இரண்டு வருடங்கள்வரை உயிர் வாழக்கூடியவை. தண்டு வண்டுகள் கிழங்கு வண்டுகளை விட சுறுசுறுப்பானவை. இவற்றில் பலமான சிறகுகளும் காணப்படும் ஆனால் இவை அரிதாகவே பறக்கும் இவை வாழைத் தோட்டத்திற்கு அண்மையில் பாதுகாப்பான இடங்களில் வாழும்.

**முட்டை**

வாழைபோலித்தண்டின் (வாழைத்தண்டு) இலைமடல்களிற்கிடையே காணப்படும் காற்றிடை வெளிகளில் பெண் வண்டு



முட்டையிடும். நில மட்டத்திலிருந்து 1-1.2 ச.மீவரை உயரமுள்ள பகுதிகளில் முட்டையிடுவதற்கு இவை அதிக விருப்பம் கொண்டவை முட்டைகள் மஞ்சள்சேர்ந்த வெண்ணிறமானவை,உருளை வடிவானவை இம்முட்டைகள்3-4 நாட்களில் பொரித்து குடம் பிகள் வெளியேறும். ஒரு பெண் வண்டு தனது வாழ்க்கைக்காலத் தில் நூறிற்கும் அதிகமான முட்டைகளை இடும்.

**குடம்பி**

முட்டையிலிருந்து வெளியேறும் குடம்பி போலித்தண்டில் சுரங்கம் அமைத்து அதனை உணவாக உட்கொள்ளும். குடம்பிப் பருவம் 11-18 நாட்களாகும்.

**கூட்டுப்புழு**

முற்றாக வளர்ச்சியடைந்த குடம்பி தண்டின் மேற்பரப்பிற்கு அண்மையில் வாழை நாரைப் பயன்



படுத்தி கூடொன்றை அமைத்து அதில் கூட்டுப் புழுப்பருவத்தைக் கழிக்கும். கூட்டுப் புழுப்பருவம் 08-10 நாட்கள் வரையாகும்.

**கட்டுப்படுத்தல்**

**தோட்டச்சுகாதாரமுறை:~**

01.அறுவடை செய்தபின் பயிர் மீதிகளை தோட்டத்திலிருந்து அகற்றிவிடல்.

02. அறுவடை செய்தபின்னர் போலித்தண்டை நில மட்டத்தில் வெட்டியபின் நிலத்தில் மீதியாயுள்ள மேற்பரப்பின் மீது 6 கிராம் கார்போபியூரானை இடவும். அல்லது வெளித்தெரியும் தண்டை மண்ணால் மூடிவிடவும்.

**பயிர்ச்செய்கை முறை**

01)மேலதிகமான உறுஞ்சிகளைப் பிடுங்கி அகற்றிவிடல்.

02) இறந்த இலைகளையும், தண்டுகளையும் அழுகும் பகுதிகளையும் அகற்றிவிடல்.

03) களைகளைக் கட்டுப்படுத்தல்.

04) சிபார்சு செய்யப்பட்ட பசளைகளை இடுதல்.

05) நீள்மூஞ்சி வண்டுகளின் தாக்கம் இல்லாத வாழைக்குட்டிகளை நடல்.

06) நடுகை செய்வதற்கு முன் வாழைக் கிழங்கின் மேற்பரப்பைச் சுரண்டி விடுதல்.

07) நடுகை செய்வதற்கு முன பச்சைச் சாணம், சாம்பல், நீர் என்பவற்றை ஒன்றாகச் சேர்த்து தயாரிக்கப்பட்ட கரைசலில் வாழைக கிழங்குகளை அமிழ்த்தி வைத்து நடல்.

**இரசாயனக் கட்டுப்பாட்டு முறை**

01 அறுவடை செய்த பின் மீதமாகும் போலித்தண்டை 06-10 செ.மீ வரை தடிப்புள்ளதாக வெட்டவும். இவ்வாறு வெட்டிய இரண்டு வாழைத் துண்டுகளுக் கிடையே கார்போ பியூரானை வைக்கவும். இது ஒரு பொறியாகும். ஒரு ஏக்கருக்கு 25 பொறிகள் தேவை. மாதத்திற்கு ஒரு தடவை இப் பொறிகளைப் புதுப்பிக்க வேண்டும்.

**பயிர்ச்சுழற்சி**

01. ஒரு தோட்டத்தில் வாழையை 3-4 வருடங்களுக்கு மாத்திரமே பராமரிக்க வேண்டும். பின்



வாழையைப் பிடுங்கி அகற்றி வேறு பயிர்களை நடுகை செய்ய வேண்டும்.

02. வாழைத் தோட்டம் நீள் மூஞ்சி வண்டால்/ வாழைத் தண்டு வண்டால் மோசமாகப் பாதிக்கப்பட்டால் அதனை முற்றாக அழித்து விடவேண்டும்.

**நா.குகானந்தன்,**
**விவசாயப் போதனாசிரியர்,**
**ஒட்டுசுட்டான்.**

# சிறுநீரகம் தானம் செய்வோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

சிறுநீரகம் தானம் செய்பவாகளுக் கென்று சில விதிமுறைகள் உளளன அவைகளில் முக்கியமானவை.

01. அவரது சிறுநீரகங்கள் இரண்டும் சீராக இயங்க வேண்டும். ஒன்றை இழந்த பிறகும் மற்றொன்றை வைத்துக் கொண்டு அவரால் வாழ்க்கை நடத்த இயல வேண்டும்.

02. அவரது உடலில் தீவிர சிகிச்சை தேவைப்படுகின்ற சில நோய்கள்,புற்றுநோய் மற்றும் தடைப்படுத்த முடியாதநீரழிவு நோய் ஆகியவை இருக்கக் கூடாது.

03. முடிந்த வரை 40 வயதுக்குற்பட்ட நபராக இருக்க வேண்டும்.

04. அவரது ரத்தம் எபிஓ வகைப்படி பெறுபவரின் வகையைச் சார்ந்த ஒன்றாகவே இருக்க வேண்டும்.

05.அவரது சிறுநீரகத்துக்கு செல்லும் தமனி ஒன்று மட்டுமே இருக்க வேண்டும். பிறவியிலேயே ஆறாவதுவிரல் இருப்பதுபோல தமனிகள் மூன்று, நான்கு கூடச் சிலருக்குஇருக்கலாம். அப்படி இருந்தால் அறுவை சிகிச்சை செய்வது கடினமாகிவிடும்.

06.திசு மாற்ற ஏற்புக் கணிப்பு (Tissue-typing) இதனை HLA Typing என்று அழைக்கின்றார்கள். இது ஒரு தனிப்பட்ட முறை சோதனை HLA-AIBICIமற்றும் DR என்ற வகைகள் ஒன்றுக் கொன்று பொருந்துகின்றனவா என்று பார்த்து பிறகு சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

மாற்று சிறுநீரகம் தருகிறவர்கள் ஒன்று உயிரோடு இருக்கலாம். அல்லது விபத்தில் மூளை பெருமளவுசிதைந்து, ஆனால் இதயம் மட்டும் இயங்கும் நிலையில் உள்ளவர்களாக அதாவது செத்தும் கொடுப்பவர்களாக (Cadeveric Donors) இருக்கலாம்.





கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதோடு, மின் அஞ்சல் மூலம் தகவல்களையும் பறிமாறிக் கொள்ளக் கூடிய கையடக் கத்தொல பேசி ஒன்றை யப்பானிய கையடக்கத் தொலைபேசி உற்பத்தி நிறுவனம் தயாரித்துள்ளது. இது 1.24 செ.மீற்றர் அகலமான திரையையும் புகைப்படக்கருவியையும் கொண்டுள்ளது.



ஏறத்தாழ 1200 பாடல் களைப் பதிவு செய்யக் கூடிய டிஜிட்டல் இசைக் கருவியொன்றை தென்கொரியாவிலுள்ள றி.இன்கொம் நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது. இதன் பெறுமதி 345 அமெரிக்க டொலராகும்.

# மணிக்கு 394 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய அதிவேக மின்சாரக் கார்





பிரிட்டன் பொறியியலாளர் குழுவொன்று உலகில் அதிவேக மின்சாரக்கார் ஒன்றை வடிவமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இதற்கு முன்பு மணிக்கு (394-கி மீற்றர்) 245மைல் வேகத்தில் செல்லக்கூடிய மின்சாரக்கார் அமெரிக்காவின் நெவாடாவில் வடிவமைக்கப்பட்டிருந்து ஆயினும் அதனையும் விஞ்சுகின்ற வகையில் பிரிட்டன் பொறியியலாள்கள் (483 கி.மீ)300 மைல் வேகத்தில் செல்லக்கூடிய காரை வடிவமைக்க முயறசித்தனர். இதற்கான ஆரம்பகட்ட ஆலோசனைகளை அமெரிக்க அதிகாரிகள் வழங்கினர். இதனை முதலில் பரிசோதித்தவர்கள் இது 237 கிலோ மற்றர் வேகத்தில் சென்றதை அவதானித்துள்ளனர். எனினும் பின்னர் இது 394 கி.மீற்றர் ஓடியதை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர். எனவே இதுவே உலகிலுள்ள அதிவேக காராக இருக்கும் என பொறியியலாளர் கருதுகின்றனர்.

இதற்காக 600 வோல்ட்ஸ் டி.சி மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. இதற்குப் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் அதிக வெப்பமடைதலைத்தடுக்க நான்கு சோடி காற்றாடிகள் பொருத்தப்பட்டுள்ளன.இது அதிக வெப்பமடைதலைக் கண்டுபிடிக்கும் விசேட கருவிகள் தகுந்த நேரத்தில் அறிவிக்கும்இவை உண்மையில் சூழல் மாசடைதலைத் தடுக்கின்றன. இதற்கு முன்பு இது போன்ற மின்சாரக்காரை 2004இல் டுனீசியா வடிவமைக்கவிருந்த போதும் ஓடுபாதை சமமின்மை காரணமாகக் கைவிடப்பட்டது.

# சிறுநீரக கற்களை அகற்ற புதிய சிகிச்சை முறை

சிறுநீரக கற்களை உடைத்து வெளியில் எடுக்கும் நவீன கருவிச் சிகிச்சை முறைக்கு லிப்தோட்ரிப்ஸி என்று பெயர் இந்த நவீன கருவிச் சிகிச்சை முறையில் இரண்டு வகைகள் உள்ளன.

எலக்ட்ரா கார்போரல் ஷாக் வேவ் லித்தோடிரிப்ஸி கருவி மூலம் விலாப்புறத்திலிருந்து அதிர்வலைகளைச் செலுத்தி சிறுநீரகக் கற்களை உடைத்து சிறுநீர் மூலம் வெளியேற்றுவதே சிகிச்சை. இச் சிகிச்சைக்கு அரைமணி நேரம் முதல் 45 நிமிடம் வரை ஆகும். சிறு நீரகத்திலுள்ள கல்லின் அளவு 2 செ.மீற்றருக்குக் குறைவாக யுரிட்டர் குழாயின் சிறுநீரகத்திலிருந்து சிறு நீர்ப்பைக்குச் செல்லும் குழாய் மேற்புறத்தில் கல் உள்ள நிலையில் இச்சிகிச்சை நல்ல பலனை அளிக்கும்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற ஜெயந்தன் படையணியின் 12ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வின் பதிவுகள்


அணி நடையின்போது


அகவணக்கத்தின் போது


மாவீரர் மண்டப திறப்பு நிகழ்வில்


களமிறங்கத் தயாராகிய நிலையில் உதைபந்தாட்ட அணிகள்

# பொதுக்கட்டமைப்புக் கெதிராக தே.தே.இயக்கம் நாடுதழுவிய ரீதியில் போராட்டம் நடத்த முடிவு!

## பௌத்த விகாரைகளில் கறுப்புக்கொடி கட்டி மணி ஒலிக்க ஏற்பாடு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் பாதயாத்திரைகளையும் கறுப்புக் கொடிப்போராட்டங்களையும் முன்னெடுப்பதென்ற தீர்மானத்தை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய இருபது சிங்கள அமைப்புக்கள் தீர்மானம் மேற்கொண்டன.

கொழும்பு-7 சௌசிறிபாயாவில் தேசப்பற்றுள்ளதேசிய இயக்கத்தின் அழைப்பின் பேரில் ஒன்று கூடிய பௌத்த குருமார் மற்றும் சிங்கள பேரினவாத அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொதுக்கட்டமைப்பு பயங்கரமானது. அதில் என்ன அடங்கியுள்ளதென சனாதிபதி தெரிவிக்கவில்லை. தன்னிச்சையாக செயற்படமுனைகிறார். எனவே சிங்கள அமைப்புக்கள் பௌத்த குருமார் அனைவரும் ஓரணியில் திரண்டு நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களையும், பாதயாத்திரைகளையும், கறுப்புக் கொடிப்போராட்டங்களையும் நடத்திப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதைதடுக்க வேண்டுமென இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பௌத்த குருமார் மற்றும் அனைத்து சிங்கள அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மத்திய குழுவை உடனடியாகக் கூட்டி முடிவெடுத்து அங்கு கலந்து கொண்ட அமைப்புகளுக்கு அறிவித்து, பரந்தளவிலான எதிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளலாமென இங்கு கருத்துத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

நாடு பூராகவும் உள்ள பௌத்த விகாரைகளில் மணியோசைகளை ஒலிக்கச் செய்து, கறுப்புக்கொடிகளை ஏற்றி மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துக் கூறவேண்டும் எனத் தெரிவித்தார். மேலும் இங்கு கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத்தலைவரும், ஜே.வி.பி.,எம்.பி.யுமான விமல் வீரவன்ச கூறியதாவது; கண்டியில் எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்பதாக [illegible]ய எதிர்ப்புத்தினத்தைப் பிரகடனப்படுத்தி பொதுக்கட்டமைப்புக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து எப்படியாது தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் தனி ஈழம் அமைந்து விடும் சர்வதேச சக்திகளாலேயே பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படவேண்டுமென அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

அரசாங்கமும் தலைமைத்துவமும் இதனை அமைப்பதற்காக தள்ளப்படுகின்றன. இது விரும்பிச் செய்யும் விடயமல்ல. கடல் கோள் அனர்த்த நிவாரண நிதியுதவிகளை நிறுத்துவோம். நாட்டின் அபிவிருத்திக்கான நிதியுதவிகளை செய்யமாட்டோம். இவையனைத்தும் கிடைக்கவேண்டுமென்றால் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்ளுங்கள் என்றும் சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன என்றார்.

# தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கு பல்கலை அனுமதிக்கான தகைமை நிபந்தனை நீக்கம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதில் விதிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை கல்வி அமைச்சு நீக்கியுள்ளது. இதற்கான தீர்மானம் கிழக்குக் கல்வி அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன. வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் தற்போது கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரை அந்தப்பதவியிலிருந்து நீக்காமல் அவர்களுக்கு நிரந்தர அதிபர் பதவி வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தல் இதற்கு வசதியாகத் தற்போது கடமையாற்றும் அனைத்துக் கடமை நிறைவேற்று அதிபர்களின் பெயர்ப் பட்டியலையும் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கிழக்கு கல்வி அமைச்சிடம் இருவார காலத்திற்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நீண்ட காலமாகக் கடமையாற்றிவரும் அனைத்து ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களையும் நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்தல் இவர்கள் க.பொ.த. (உ/த) சித்தியடைந்து க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதில் உள்ள பிரதான தடையான கஷ்ட,அதிகஷ்டப்பிரதேசபாடசாலைகள் என்ற வரையறையை அமைச்சரவையினது கவனத்திற்குக் கொண்டு வந்து உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் கடமையாற்றும் இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் எவருக்கும் ஒப்பந்த அடிப்படையிலான மீள் நியமனம் வழங்குவதில்லை. வெற்றிடம் ஏற்படும் பதவிகளுக்கு சேவையிலுள்ள இளம் அதிகாரிகளை நியமித்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# தமிழ் படைப்பாளிகள் கழகத்தால் சிவராம் குடும்ப நல உதவி நிதியம் ஆரம்பம்

மாமனிதர் சிவராமின் குடும்பநலன்கருதி தமிழ் படைப்பாளிகள் கழகத்தினால் " மாமனிதர் சிவராம் குடும்பநல உதவி நிதியம்" ஆரம்பிக்கபட்டுள்ளது.

இந்த நிதியத்திற்கு கழகம் முதலில் ஆயிரம் டொலர்களை வழங்கி தொடக்கிவைத்துள்ளது. இந்த நிதியத்திற்கு தமிழ்த் தேசியத்தைக் காதலிக்கும் உணர்வாளர்கள் அங்காடி உரிமையாளர் துறைசார்வல்லுநர்கள் பொதுமக்கள் அனைவரும் முடிந்தளவு உதவுமாறு தமிழ்ப்படைப்பாளிகள் கழகம் கேட்டுள்ளது.

# கனடா மீள் கட்டமைப்புச் செயலணியால் முதற்கட்டமாக 50 வீடுகள் அமைக்கப்படும்!

கனடாவிலுள்ள ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புச் செயலணியால் முன்னெடுக்கப்படும் திட்டத்தில் முதற்கட்டமாக 50 குடும்பங்களுக்கு வீடுகளும், அவர்கள் தமது தொழிலை ஆரம்பிப்பதற்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான பங்களிப்பை கனடா வாழ் தமிழ்மக்களிடமிருந்து குறிப்பாக வியாபார ஸ்தாபனங்கள், ஊர்ச்சங்கங்கள், பழைய மாணவர், மாணவர் அமைப்புக்கள் மற்றும் சமய ஸ்தாபனங்களின் ஆதரவுடன் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் கனடா ஆழிப் பேரலை மீள்கட்டமைப்பு செயலணி செயலாற்றி வருகின்றது. இத்திட்டத்தின் அவசிய தேவை கருதி கனடா ஒட்டாவா கால்ரன் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தமது ஆரம்ப பங்களிப்பாக ஒரு வீடு கட்டுவதற்கான செலவை பொறுப்பேற்றுள்ளனர். கல்வி கற்று வரும் வேளையிலேயே தேசத்தின் இடர்களுக்கு எல்லாம் தம்மால் இயன்ற வகையில் பங்களிப்புச் செய்துவரும் கால்ரன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் அமைப்பு ஆழிப்பேரலை மீள் கட்டுமானப் பணியிலும் தமது ஆரம்ப பங்களிப்பை நல்கி மற்றைய மாணவர் அமைப்புக்களுக்கும், ஊர் அமைப்புகளுக்கும் முன்னுதாரணமாக திகழ்கின்றனர்.

## ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு!

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள ஈ.பி.டி.பி.அலுவலகம் மீது கடந்த புதன்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. வீசப்பட்ட கைக்குண்டு பதுங்குகுழிக்கு அருகாமையில் வீழ்ந்து வெடித்துள்ளது. இதனால் பதுங்குகுழிக்கு சேதமேற்பட்டுள்ளது. இது தொடர்பாக வாழைச்சேனை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## கொழும்பு பங்குச்சந்தை பங்கு விற்பனை உயர்வு

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் என்ற சனாதிபதியின் அறிவித்தலை அடுத்து கொழும்பு பங்குச்சந்தையின் பங்கு விற்பனையில் கடந்த சில நாட்களாக உயர்ச்சிப் போக்கு காணப்படுகிறது. நேற்று முன்தினம் பங்குச் சந்தையில் அனைத்துப்பங்குகளின் விலைச்சுட்டெண்கள் 26.51 புள்ளி களால் உயர்ந்து 1816.76 அலகுகளாக காணப்பட்டன.இதேவேளை மிலன்கா விலைச் சுட்டெண்கள் 20.9 புள்ளிகளால் உயர்ந்து இரண்டாயித்து 599.71 அலகுகளாக காணப்பட்டன.

## திருத்தச்சட்ட மூலம் நிறைவேறியது

வெடிப்பொருட்கள் தொடர்பான திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இதன்படி அமைச்சரின் செயலர் வெடிபொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் வெடிப்பொருட்களை சட்டவிரோதமாக வைத்திருப்பவர்களுக்கான அபராதம் 25 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிக்கவும் இந்த திருத்தச்சட்டமூலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.


முல்லை மாவட்ட கட்டட நிர்மாணிகளிற்கான (மேசன்)

**கலந்துரையாடல்**

இடம் :- புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணியம்மகாவித்தியாலயம்
திகதி :- 08.05.2005 (ஞாயிறு)
நேரம் :- காலை 9.00 மணி

முல்லை மாவட்ட கட்டட நிர்மாணிகள் அனைவரும தவறாது கலந்து கொள்ளவும்

கட்டட நிர்மாணிகள் சங்கம்,
முல்லை மாவட்டம்.

(6108)



இலங்கை செஞ்சிலுவை சங்கம் கிளிநொச்சி கிளையினால் நடாத்தப்படும்

**மே -08 உலக செஞ்சிலுவை தினம்**

காலம் :- 2005 மே 08 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி
இடம் :- பண்பாட்டு மண்டபம்,கிளிநொச்சி
தலைவர் :- திரு.இ.கார்த்திகேசு அவர்கள் (நிறுவனத்தலைவர்)

பிரதம விருந்தினர்
**உயர் திரு தி.இராசநாயகம் அவர்கள்**
அரசாங்க அதிபர்,கிளிநொச்சி மாவட்டம்.

சகல ஆயுட்கால, உதவும் தொழிற்படும்,மாணவ அங்கத்தவர்களையும், தொண்டர்களையும், நலன்விரும்பிகளையும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு. அன்புடன் அழைக்கின்றோம்.

க.கணேஸ்,
கௌரவ செயலாளர்.

இ.கார்த்திகேசு
கௌரவ தலைவர்.

மற்றும் பணிப்பாளர்கள்,பணியாளர்கள்.

இலங்கை செஞ்சிலுவை சங்கம்,கிளிநொச்சி கிளை,கண்ணன் கோவில் வீதி,கிளிநொச்சி.
021-2285843 (சி.11866)



# மீள் கேள்வி அறிவித்தல்

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்
பணிமனை, கிளிநொச்சி.

உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் - மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி

மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சிக்கு 2005ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு உலர் உணவுப் பொருட்களை வழுங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. கேள்விகள் யாவும் 2005 ய,ன் 01ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்வி திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழ் ரூபா 20000/=வும் (Worth Report) ரூபா 50000 /= இதற்கான உத்தரவாத முறியும் (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 100/= செலுத்தி 2005 மே 31 ஆந் திகதி பி.பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இரு பிரதிகளில் **மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும்** மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விபரம் எழுதப்பட்டு இப்பணி மனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப் படல் வேண்டும். பதிவுத்தபால்கள் எனின் குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபாலில் இடப்படல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியாம். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி.
(சி-11842)



# கேள்வி அறித்தல்

## பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், கிளிநொச்சி

- பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள வாகனங்களிற்கு 2005 ஆம் ஆண்டிற்கான ரயர்கள், ரியூப்புகள், பற்றறிகள் ஆகியவற்றிற்கான தேவைப்படும் பட்சத்தில் வழங்குனர்களை பதிவு செய்தல் .
- கேள்விப் பத்திரங்கள் யாவும் எமது திணைக்களத்தில் 04.05.2005 இல் இருந்து அலுவலக நேரத்தில் மு.ப 8.30 தொடக்கம் பி.ப 4.30 வரை மீளளிக்கப்படாத தொகையான 250 ரூபாவை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பப் படிவங்கள் யாவும் 01.06.2005 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர், பிரதிமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.
- தபால் முகப்பில் இடது பக்க மேல் மூலையில் 2005 ஆம் ஆண்டிற்கான ரயர், ரியூப், பற்றறிகள் வழங்குனர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- கேள்விகள் 01.06.2005 பி.ப 2.00 மணிக்கு மூடப்படுவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
- பொருட்களின் விபரங்கள் பின்வருமாறு:-

| வாகன இனம் | ரயர் அளவு | ரியூப் அளவு | பற்றறி |
|---|---|---|---|
| TOYATAHIASE | 185X14 | 185X14 | 95Ams- 12V |
| MISUBIAHI 2200 | 600X14 | 600X14 S/L | 65Ams- 12V |
| NISSAN PETORL | 235X185RX16 | 235X185RX16 | 95Ams- 12V |
| NISSAN URVAN | 195X15 | 195X15 S/L | 95Ams- 12V |
| NISSAN DUBLE CAB | 215X75/15 | 215X75/15 | 95Ams- 12V |
| MITSUBISHI CANTOR | 700X16 | 700X16 L/V | 90Ams- 12V |
| ISSUSE | 1000-20 | 1000X20 L/V | 95Ams- 12V |
| TATA 12 | 900-20 | 900X20 L/V | 120Ams- 12V |
| NISSAN D22 PICKUP | 205R-15C | 205R-15C | 95Ams- 12V |
| MITSUBISHI L200 | 205R-15C | 205R-15C | 95Ams- 12V |
| MARUTHI SUZIKI | 4.50-12 | 4.50X12 S/L | 70Ams- 12V |

- மற்றும் ஓட்டோ, MD-90.HERO HONDA SS100, SCUTYPEP, TVS VICTOR ஆகியவற்றின் ரயர், ரியூப், பற்றறிகள் யாவும் இவற்றுள் அடங்கும்.

மேலதிக தொடர்புகளுக்கு எமது திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம்.
TP-021-2285932 , 021-2285933

வைத்திய கலாநிதி
த.சத்தியமூர்த்தி,
பணிப்பாளர்,
பி.மா.சு.சே. திணைக்களம்,
கிளிநொச்சி.

(சி-11841)



45ஆம் நாள் நினைவஞ்சலியும்
32ஆவது பிறந்ததினமும்

பிறப்பு
30 - 04 - 1973



இறப்பு
24 - 04 - 2005

**சங்கரப்பிள்ளை கருணாகரன்**
பேருந்து நடத்துனர்

07.05.2005 இன்று அன்னாரின் இல்லத்தில் அந்தியேட்டி கிரியைகள் நடக்க இருப்பதால் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்ப தோடு அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(5849) குடும்பத்தினர்.



தமிழகம் சென்னைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் நேற்று முன்தினம் பி.எஸ்.எல்.வி. சி-6 ரொக்கெட் அனல் மற்றும் புகை கக்கியபடி விண்ணில் சீறிப் பாய்ந்து செல்வதையும், ரொக்கெட் ஏவும் நிகழ்ச்சியை நேரில் பார்வையிட்ட இந்திய சனாதிபதி அப்துல்கலாம் விஞ்ஞானிகளை பாராட்டுவதையும் வான்நோக்கி செல்லும் ரொக்கெட்டை ஆச்சரியத்துடன் பார்க்கும் மக்களையும் படங்களில் காணலாம்.

## டில்லியில் மர்ம நோய் 14 பேர் மரணம்

டில்லியில் மர்ம நோய்க்கு 14 போ பலியாகி உள்ளனர்.மூளையை பாதிக கின்ற ஒரு கொடிய மர்ம நோய் டில்லி யில் பரவிவருகிறது. இந்த மர்ம நோய்க்கு இதுவரை 14 பேர் பலியாகி இருக்கிறார்கள் டில்லி மாநில அரசும் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளது. மேலும் 90 பேர் இந்த நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர் இந்த நோய்க்கான தடுப்பு மருந்திற்கு தற்போதுதட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. டில்லி இந்துராவ் மருத்துவ மனையின் தலைமை மருத்துவர் குதே சியா இந்த தகவலை தெரிவித்துள் ளார். டில்லியில் பரவிவரும் இந்த நோய் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பிக்கள் பாராளுமன்றத்திற்கு திரும்ப வேண்டும்

### -இந்தியப் பிரதமர் வேண்டுகோள்



பாராளுமன்றப் புறக்கணிப்பு விவ காரத்தில் உண்மைக்கு புறம்பாக சனாதிபதியிடம் புகார் செய்வதா? என பா.ஜவுக்கு பிரதமர் மன்மோகன்சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பா.ஜ தலைமையிலான தேசிய சனநாயக கூட்டணி பாராளுமன்ற புறக்கணிப்புப் போராட்டம் நடத்தி வரு கிறது இது குறித்து பிரதமர் மன் மோகன்சிங் மாநிலங்களவையில் நேற்று முன்தினம் தெரிவிக்கையில் பாராளு மன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளு மாறு தே.ஜ கூட்டணிக்கு இரண்டு தடவைகள் நான் அழைப்பு விடுத்து விட்டேன் ஆனால் அவர்கள் செவி சாய்க்கவில்லை. மக்களவை பா.ஜ தலைவர் அத்வானி மாநிலங்களவை பா.ஜ. தலைவர் ஜஸ்வந்சிங் பாராளு மன்ற பா.ஜ தலைவர் வாஜ்பாய் ஆகி யோரிடமும் தனித்தனியே நான் வேண்டுகோள் விடுத்தேன்

பாராளுமன்றப் புறக்கணிப்பு விவ காரத்தை இத்தோடு கைவிட்டுவிடு வோம் எந்த பிரச்சினையானாலும் பாராளுமன்ற அவையில் சனநாயக முறையில் பேசி தீர்த்துக்கொள் ளலாம் என்று பா.ஜ தலைவர்களிடம் கூறினேன். ஆனால் அவர்கள் பாராளு மன்றத்தைத் தொடர்ந்து புறக்கணிக் கப் போவதாக அறிவித்து இருக் கிறார்கள்.

இது தொடர்பாக சனாதிபதி அப்துல்கலாமிடம் அவர்கள் அளித்த மனுவில் மிக மிக மோசமான வார்த் தைகள் பயன்படுத்தப்பட்டு இருக் கின்றன. பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியா வந்த போது முன் னாள் பிரதமர் வாஜ்பாயை அவர் சந்திக்க மத்திய அரசு தடை விதித்த தாக சனாதிபதியிடம் புகார் கூறியுள் ளனர். இது முழுக்க முழுக்க உண் மைக்கு புறம்பானது வேண்டுமென்றே பா.ஜ. தலைவர்கள் அவதூறு பிரச் சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

பா.ஜ. தலைவர்கள் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக இருக் கிறது. இதை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் இப்போதும் கூட தேசிய சனநாயக கூட்டணி எம்.பி. க்கள் பாராளுமன்றத்திற்கு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுக் கின்றேன் என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## இரு செயற்கை கோள்களை இந்தியா வானுக்கு ஏவியது

இந்தியாவின் முழுத்தயாரிப்பில் உருவான இரு செயற்கைகோள்கள் வானில் ஏவப்பட்டன.

இரு செயற்கை கோள்களையும் தாங்கிய பி. எஸ். எல்.வி.சி.6என்ற உந்துகணை நேற்று முன்தினம் காலை சென்னை ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி ஆராட்சிமையத்திலிருந்து புறப்பட்டது.

செயற்கை கோள்களை தாங்கிய உந்துகணை புறப்பட்டு சரியாக18.20 நிமிடத்தில் முதலாவது செயற்கை கோள் உந்துகணையிலிருந்து பிரிந்துதன் சுற்றுவட்டத்தில் பிரவேசித்தது இது சரியாக பூமியிலிருந்து 627 கிலோ மீற்றா தொலைவில் நிலை நிறுத்தப்பட்டது.

மற்றைய செயற்கைக்கோள் புறப்பட்டு சரியாக 18.41 நிமிடத்திற்கு பின் பூமியிலிருந்து 628 கிலோமீற்றர் தொலைவில் உந்துகணையை விட்டு பிரிந்து தனது சுற்று வட்டத்தில் பிரவேசித்தது.

## குழந்தைகள் கடத்தலில் ஈடுபட்ட பெண்மணி பொலிசாரால் கைது

இந்தியாவில் குழந்தைகள் கடத்தலில் ஈடுபட்டுவந்த பெண்மணிகள் இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சலிபா, ஜெபக்கனி எனும் இரு பெண்களும் கடந்த சில நாட்களாக குழந்தைகளைப் பிடித்து கடத்தி வந்துள்ளனர். இவர்களது புகைப்படம் தினத்தந்தி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதையடுத்து பொதுமக்களில் சிலர் பொலி சாருக்கு கொடுத்த தகவலையடுத்து இவர்களைக் கைது செய்த சென்னை பொலிசார் மத்தியகுற்றப்பிரிவு பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார். பொலிசார் இவர்களிடம் தீவிரவிசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

## முரளிதரன் மீது அவமதிப்பு வழக்கு காங்கிரஸ் சார்பில் தொடரப்பட்டது


கேரள முன்னாள் முதல்-மந்திரி கருணாகரனின் மகன் முரளிதரன் காங்கிரசிலிருந்து நீக்கப்பட்டதை யொட்டி அவர்கள் புதிய கட்சியைத் தொடங்கினார்கள். இந்திரா தேசியக் காங்கிரஸ் என்ற புதிய கட்சி திருச் சூரில் நடந்த மாநாட்டில் தொடங்கப் பட்டது.

இந்தப்புதியகட்சி தொடங்கப்படு வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நாட்டிகாப்பகுதி காங்கிரஸ் செய லாளர் உன்னிகிஷ்ணன் திருச்சூர் விடுமுறைகால நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். அதில் முரளிதரன் தனது புதிய கட்சிக்கு காங்கிரஸ் பெயரையோ, மூவர்ணக்கொடியையோ பயன் படுத்த தடைவிதிக்கவேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி புதிய கட்சிக்கு முரளிதரன் காங் கிரஸ் பெயரையோ, மூவர்ணக்கொடி யையோ பயன்படுத்த இடைக்காலத் தடை விதித்திருந்தார். இந்த வழக் குத் தொடர்பாக வருகிற யூன்மாதம் நீதிமன்று திறந்தபின்பு மீண்டும் விசாரணை நடத்தி இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் என்றும் நீதிபதி தெரி வித்திருந்தார்.

இதைக் கருணாகரன் பொருட் படுத்தவில்லை. அவர் திட்டமிட்டபடி புதிய கட்சியைத் தொடங்கிவிட்டார். இந்திரா படத்துடன் காங்கிரஸ் கொடி யும் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தது.

நீதிமன்றத்தடையை மீறி முரளி தரன் தனது புதிய கட்சிக்கு இந்திரா தேசியக் காங்கிரஸ் என்று பெயர் சூட்டியதும், மூவர்ணக் கொடியை பயன்படுத்தியதும் நீதிமன்றினை அவமதிப்பதாகும் என்று உன்னி கிருஷ்ணன் திருச்சூர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்.



மக்கள் தமிழ்தேசம் கட்சி நிறுவனர் ராஜ.கண்ணப்பன் நேற்று முன்தினம் தி.மு.க தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து. தமிழக இடைத்தேர்தலில் தி.மு.கவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

## ஆந்திர முதல்வருக்கு நக்சலைட்டுக்கள் அச்சுறுத்தல்

ஆந்திராவில் தீவிரவாதிகள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட் டுள்ளார்கள் தற்போது முக்கிய அரசி யல் பிரமுகர்களையும், அதிகாரிளை யும் குறிவைத்து தாக்க தொடங்கி உள்ளார்கள் என இந்திய இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரகாச மாவட்டம் ஓங்கோலில் பொலிஸ் அதிகாரியை கண்ணி வெடி மூலம் கொல்ல முயற்சி செய் தனர். அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு தீவிரவாதிகளுக்கு உருவாக் கப்பட்ட நினைவுச் சின்னத்தை திறக்க முயன்ற நச்சலைட்டு பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டனர். இதை கண்டித்து நக்சலைட்டு அமைப்பின் பிரதி நிதி கத்தர் கூறும்போது காங்கிரசுக்கு அழிவு காலம் வந்து விட்டது" என்று எச்சரிக்கை விடுத்தார்.

இதைத் தொடர்ந்து முதல் - அமைச்சர் ராஜசேகர ரெட்டிக்கு நக்சலைட்டுகளால் பாதிப்பு ஏற்பட லாம் என்று பொலிசார் கருதுகின் றனர். இதையொட்டி அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட் டள்ளது.

## இடைக்கால அறிக்கை மூலம் மாநில அரசு உண்மையை மறைக்க முயற்சி

### –மத்திய ரயில்வே அமைச்சர் லல்லு

(புதுடில்லி)

"என் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து குஜராத் தடயவியல் இயக் குனரகம் வெளியிட்டுள்ள இடைக் கால அறிக்கையில் உண்மையை மறைக்க முயற்சி நடந்துள்ளது" என ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் குற்றம் சாட்டினார்.

குஜராத் ரயில் விபத்தில் காயம் அடைந்தவர்களை பார்க்க மத்திய ரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் வதோதரா மருத்துவமனைக்குச் சென் றார். அப்போது அவர் மீது சிலர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படு கிறது. இது குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க குஜராத் தடய வியல் இயக்குனரகத்துக்கு மாநில அரசு உத்தரவிட்டது. தடயவியல் இயக்குனரகம் தனது இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்தது. அதில் லல்லு மீது தாக்குதல் நடத்தப் படவில்லை எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

இது குறித்து தனியார் தொலைக் காட்சிக்கு அவர் கருத்துத் தெரிவிக் கையில்; மருத்துவமனைக்குச் சென்ற போது தாக்குதல் நடந்தது. தாக்குதல் நடக்காமல் எப்படி கார் கண்ணாடி உடையும். இடைக்கால அறிக்கை மூலம் மாநில அரசு தன் தவறை மறைக்கப் பார்க்கிறது. அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் ஆதார மற்றவை இடைக்கால அறிக்கை மூலம் உண்மையை மறைக்க முயற்சி நடக்கிறது தாக்குதல் நடந்ததை உலகம் அறியும் நான் எப்போதும் உண்மையையே பேசுவேன்" என்றார்.


## கேள்வி அறிவித்தல்

பெறுமதிசேர் வரியின் (விஏரி) பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்த காரர்களிடமிருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும் அனுமதிக்கப்பெற்ற சங்கங்களிடமிருந்தும் கீழ்காணும் வேலைக்கான கேள்வி கிளி.மாவட்ட செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ICTAD இல் பதிவு செய்யப்பெற்றிருத்தல் அவ சியம்)

**1. தேசிய கூட்டுறவு சபைக்கான கட்டடம் மீளமைத்தல்**

கேள்விப் பத்திரங்கள் 2005.05.19ஆம் நாள் பகல் 12.00 மணி வரை எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திர முடிவுநாள் 2005.05.20 ஆம் நாள் காலை 10.00 மணிவரை.

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர் கிளி.மாவட்ட செயலக கேள்விச்சபை**
**தலைவர்**
**கிளிநொச்சி மாவட்டம்** (சி-11844)


## ஜோதிடர் தோற்றார்

இரண்டுசெயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எல் வி.சி.6 ரொக்கெட் நேற்று முன்தினம் காலை ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால் வானிலையை பற்றி கணிப்பதில் நிபுணரான பிரபல ஜோதிடர் எஸ்.ராமச் சந்திரன் என்பவர், நேற்றுமுன்தினம் காலை வானிலை மோசமாக இருக்கும் என்றும் பயங்கர சூறாவளி காற்று வீசும் என்றும், இதனால் பி.எஸ். எல்.வி.சி. -6ரொக்கெட்டை விண்ணில் செலுத்த முடியாது. என்றும் கூறிஇருந்தார். ஆனால் அவர் கூறியது எதுவும் நடக்க வில்லை ஸ்ரீஹரிகோட்டாவில் நேற்று முன்தினம் வானிலை தெளிவாக இருந்ததால் திட்டமிட்டபடி ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. ஜோதிடரின் கணிப்பு தவறிவிட்டது.

# மேஜர் மாறன் நினைவாக மின்னொளியில் கரப்பந்து

மேஜர் மாறன் நினைவான கரப்பந்துச் சுற்றுப் போட்டிகள் நாளை மாலை 06.30 மணி தொடக்கம் கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெறுமென தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தெரிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகள் பாடசாலை, கழக அணிகளை இணைத்து நடாத்தப்படுகின்றது. முதல் நாள் போட்டியில் கலந்துகொள்ளும் பாடசாலைகள் அணிகள், கிளி. மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கிளி. தர்மபுரம் மகா. வித்தியாலயமும், கிளி. கனகபுரம் அணியை எதிர்த்து கிளி. பற்றிமா மகா வித்தியாலயம்.

கழக அணிகள்: சோலை வி.கழகம் அணியை எதிர்த்து இளந்தென்றல் வி.கழகம், சுப்பராங் விகழகம் அணியை எதிர்த்து நியூஸ்ரார் வி.கழகமும் மோதுகின்றன.

போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் மேற்படி போட்டிகள் பத்து நாட்கள் தொடர்ந்து மின்னொளியில் நடத்தப்படும் எனத் தமிழீழ விளையாட்டுத் துறையினர் அறிவித்துள்ளனர்.




# பச்சிலைப்பள்ளி பிரதேச மெய்வன்மைப் போட்டி சென்.பீற்றர்ஸ் வி.கழகம் சம்பியனானது




பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த இரண்டாம், மூன்றாம் திகதிகளில் பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தேசியக்கொடியேற்றலுடன் பளைப் பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக கிளி.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ராஜா, தலைமைப் பீட உதவி அரச அதிபர் ஜெயராணி கிளிமாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கனகராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒலிம்பிக் தீபத்தை மாவட்ட விளையாட்டு அதிகாரி சு.கனகராசா ஏற்றிவைக்க போட்டிகள் ஆரம்பமானது.

போட்டி நிறைவில் முதல் இடத்தை சென்பீற்றர்ஸ் வி.கழகமும், இரண்டாம் இடத்தினை சோலை வி.கழகமும், மூன்றாம் இடத்தை பராசக்தி வி.கழகமும் பெற்றுக்கொண்டன.

இறுதியில் பரிசளிப்பு விழாவுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் க.புவனேந்திரராஜாவின் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.




# முல்லை.மாவட்ட கல்லூரிகளுக்கிடையிலான முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டி

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் முகமாக முல்லை.மாவட்ட கிரிக்கெட் சம்மேளனம் தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் முல்லை.மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று கல்லூரிகளான மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/வித்தியானந்தாக் கல்லூரி, மு/புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி ஆகிய வற்றிகிடையில் மென்பந்து கிரிக்கெட், முக்கோண சுற்றுப் போட்டி நடாத்த திட்டமிட்டுள்ளது. இப்போட்டிகள் மூன்று கல்லூரி மைதானங்களிலும் சுழற்சி முறையில் நடைபெறும் இறுதிப்போட்டிக்கு புள்ளிகள் அடிப்படை யில் இரு அணிகள் தெரிவு செய்யப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை உங்கள் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அல்லது முல்லை.வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் துணுக்காய் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் தமிழீழ விளையாட்டுத்துறை மாவட்டப் பொறுப்பாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என முல்லை. மாவட்ட கிரிக்கெட் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (24)

# தென்னாபிரிக்க மே. தீவு ஒரு நாள் போட்டி ஜமேக்காவில் இன்று ஆரம்பம்






ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கும் மேற்கிந்தியத் தீவு அணிக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறுகிறது.

இரு அணிகள் இடையே நடைபெற்ற டெஸ்ட் தொடரை தென்ஆபிரிக்கா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து இரு அணிகள் இடையே ஐந்து ஒரு நாள் போட்டி நடக்கிறது. இதில் முதல் ஒரு நாள் போட்டி இன்று ஜமேக்காவில் நடக்கிறது. டெஸ்ட் தொடரை இழந்த மேற்கிந்தியத்தீவு ஒரு நாள் தொடரைக் கைப்பற்ற வேண்டிய நிலையிலுள்ளது.

மேற்கிந்தியத்தீவு சந்தர்போல் (தலைவர்) லாரா, கெய்ல், ஹெய்ண்ட்ஸ் மார்ஷல், சர்வான், சமித் பிராவோ, போவெல், கொலிமோர், பிரவுனி, கொலின்ஸ், பிராட்ஷா.

தென்னாபிரிக்கா: ஸ்மித் (தலைவர்) கலிஸ், கிப்ஸ், டிவில்லியர்ஸ், டிப்பன்னார், ஆன்ட்ரு ஹோல், கேம்ப், மார்க்பவுச்சர், லாங்வெல்ட், நெல்,நிதினி, ஆங்டாங், பொலாக், பிரின்ஸ்.


# கிரிக்கெட் விதிகளை மீறினார் வேவல் ஹெய்ன்ட்சுக்கு அபராதம்



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் வேவல் ஹெய்ன்ட் கிரிக்கெட்டின் விதிமுறைகளை மீறினார் என்ற குற்றத்துக்காக அண்மையில் நடந்து முடிந்த தென்னாபிரிக்காவுடனான நான்காவது டெஸ்ட் போட்டியில் ஆடியதற்காக அணுகப்படும் முழு ஊதியத்தையும் அபராதமாகச் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்தப் போட்டியில் அவர் பந்துகளை முறையற்ற விதத்தில் எறிந்ததாகவும் முறையற்ற பந்துகளை வீசியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்திய சர்வதேச கிரிக்கெட் சபை நடுவர் ஜெப்றோல் உட்பட்ட குழுவினர் இவருக்கு மேற்படி அபராதத்தை விதித்துள்ளது.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸில் கிம் கிளிஜ்ஸ்ரர் பங்கேற்பது சந்தேகம்



எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிகளில் கிம்கிளிஜ்ஸ்ரர் பங்கேற்கும் உடற்தகுதியை நிரூபிக்கும் நிலையிலுள்ளார்.

அவர் அண்மையில் நடைபெற்ற போட்டியொன்றின் போது காலில் காயம் ஏற்பட்டது. அவர் கடந்த வருடம் மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக பல போட்டிகளில் பங்கேற்காமல் இருந்தார். எனினும் கடந்த பெப்ரவரி மாதமே அவர் போட்டிகளில் கலந்துகொள்ளத் திரும்பினார் அத்துடன் பசுபிக் லைப் ஓபன் நஸ்டக் - 100 ஆகிய தொடர்களில் வெற்றி பெற்றார்.

எனினும் நேற்று முன்தினம் பேர்லினில் நடைபெற்ற போட்டியின் போது அவர் காயமடைந்தார். அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இதனால் அவர் தொடர்ந்தும் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# கோப்பாய் பிரதேச செயலர் மரதன் ஓட்டப்போட்டி

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மரதன் ஓட்டப்போட்டி இடம் பெறவுள்ளமையால் கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள அனைத்து வீரர்களையும் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமூகம் கொடுக்கும்படி விளையாட்டு உத்தியோகத்தர் கா.சுதாகரன் வேண்டியுள்ளார். (41)

# பாடசாலைகளுக்கு இடையேயான கோட்டமட்ட வலைப்பந்து போட்டி

கிளிநொச்சிக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் கிளி. ம.வி., வட்டக்கச்சிம.வி.அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

வட்டக்கச்சி ம.வி.யில் நேற்று நடைபெற்ற மேற்படி போட்டியில் கிளிநொச்சி கோட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி பாடசாலை களைச் சேர்ந்த 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டி ...பாடசாலை அணிகளில் முதலிடத்தைப் பெறும் அணிகளுடன் மேற்படி அணிகள் மோதும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (12)

## தடைகளப்போட்டி

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான தடைகள விளையாட்டுப் போட்டி ...இன்றும் நாளையும் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் பிரதேச செயலாளர் ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (41)

# மரட் ஷபின் அதிர்ச்சித் தோல்வி



ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இத்தாலியில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலிய ஓபன் 'சம்பியன்' மரட் ஷபின் (ரஷ்யா) ஸ்பெயின் வீரர் நிகோலஸ் அல்மாக்ரோவுடன் மோதினார். இதில் மரட் ஷபின் 4-6,3-6 என்ற நேர் செட்டில் நிகோலஸ்சிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.


மற்ற ஆட்டங்களில் அன்டி ரோட்டிக் (அமெரிக்கா), ஆந்த்ரே அகாசி (அமெரிக்கா), பிரான்ஸ் ஓபன் 'சம்பியன்' காஸ்டன் காடியோ, டிம்ஹென்மன் (இங்கிலாந்து) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

# டென்னிஸ் வீராங்கனை ஷரபோவா முதலாமிடத்தை பிடிக்கும் ஆவலில்



விம்பிள்டன் டென்னிஸ் சம்பியனான மரியா ஷெரபோவா ஜேர்மன் ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதியாட்டத்தில் யஸ்ரின் ஹெனின் ஹார்டனை வென்று தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்கும் ஆவலிலுள்ளார். அவர் 57 நிமிடதில் சீனாவின் சுவல் பெங்கை 6-2,6-1 என்ற செட் கணக்கில் வென்றார். இந்தத் தொடரை அவர் வென்றால் லின்சே டேவன்போர்ட் பின் தள்ளி முதலாமிடத்துக்கு வரலாம். அவர் கிளிஜ்ஸ்ர பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை. எனினும் ஜேர்மன் கால நிலை அவருக்கு ஈடு கொடுக்குமா என்பதே பிரச்சினை என்றார்.

## சிந்தனைக்கு



இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தொடரும் தலைவலி

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைப் பொறுத்து இன்றுள்ள கேள்வி ஜே.வி.பி யை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஆட்சியைத் தொடர முடியுமா? என்பதே ஆகும். அதாவது இன்றைய அரசியல் யதார்த்தத்தை எதிர்கொள்ள முடியுமா? என்பதே ஆகும். ஏனெனில் ஜே.வி.பி சனாதிபதியுடன் இணைந்து போவதாகவும் இல்லை ஆட்சியை விட்டு வெளியேறுவதாகவும் இல்லை.

வேறொருவிதத்தில் கூறுவதானால், அரசாங்கத்தின் கொள்கையை வகுப்பது யார்? ஆட்சியை நடத்துவது யார்? என்பது போன்றதொரு சவாலை சனாதிபதிக்கு ஜே.வி.பி கொடுத்துள்ளது என்பதும் மிகையாகாது. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவைத் தமது கட்டுப்பாட்டிற்கு ஏற்ப ஆட்சி நடத்துமாறு ஜே.வி.பி நிர்ப்பந்திப்பது போன்று அதன் நடவடிக்கைகள் உள்ளன.

இலங்கை அரசாங்கம் இன்று எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சுனாமி அனர்த்த மீள்கட்டுமானம் என்பவற்றிக்கு - இலங்கையின் இன்றைய பொருளாதார ஒழுங்கில் சர்வதேச உதவிகள் என்பது அவசியமானவையாக [illegible] டிக்கழிக்க முடியாதவையாகின்றன. இதனை ஜே.வி.பி கூட நிரா[illegible]ப்பதாக இல்லை. சுனாமி அனர்த்த நிதி உதவி உட்பட ஏனைய உதவிகளையும் சர்வதேச சமூகத்திடம் ஜே.வி.பியாசித்து நின்றாலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு குறிப்பாகச் தமிழ்ப் பிரதேசங்களிற்கு அதனை உரிய முறையில் பகிர்ந்தளிக்கக் கூடிய மனோ நிலையில் அது இல்லை.

அதன் வெளிப்பாடே பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கு ஜே.வி.பி காட்டிவரும் எதிர்ப்பாகும் ஆரம்பத்தில் சனாதிபதியே பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பினும் தற்பொழுது தனது நிலைப்பாட்டை அவர் மாற்றிக் கொண்டுள்ளார் போலுள்ளது. ஏனெனில் நிதியுதவி கிடைக்கப்பெறுவதற்கு இத்தகைய நிலைப்பாடு அவசியமாகியுள்ளது

ஏனெனில் சர்வதேச ரீதியில் கிடைக்கப்பெறும் நிதியுதவி உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று உதவி வழங்குவோர் எதிர்பார்க்கின்றனர்.

அத்தோடு உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படும் பட்சத்திலேயே சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கண்டியில் கூடும் உதவி வழங்குவோர் மாநாட்டில் தாம் எதிர் பார்க்கும் நிதி உதவியை ஆட்சியாளர்களால் பெறமுடியும். இந் நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கான தேவை உண்டு என்றே கூறலாம்.

இதேபோன்று உதவி வழங்கும் அமைப்புக்கள் தனியார் மயமாக்கலை தீவிரப்படுத்துமாறும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. இந்த வகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை என்பவற்றைத் தனியார் மயமாக்குதலில் சனாதிபதி சந்திரிகா அக்கறை காட்டவேண்டியவராகவுள்ளார்.

ஆனால் பொது கட்டமைப்பிற்குத் தனது எதிர்ப்பை வெளியிட்டு வருவது போன்று மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றைத் தனியார் மயமாக்கலுக்கும் ஜே.வி.பி தனது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது தொழிலாளர் போராட்டம் நடாத்தவும் அது தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

ஜே.வி.பிக்கும் - சனாதிபதி சந்திரிகாவிற்குமிடையிலான முரண்பாடுகள் ஆரம்பத்தில் மேடைகளில் மறைமுகமாகத் தாக்கிப் பேசுவதும், பின்னர் பேசியவர் தான் அவ்வாறு கூறவில்லை எனக் கூறுவதும் ஏச்சிற்குள்ளானோர். அதனைத் தாம் கருத்திற் கொள்ளப்போவதில்லை எனக் கூறுவதோடு விவகாரம் மழுங்கடிக்கப்பட்டு விடுவதுண்டு. ஆனால் சனாதிபதி கடந்த இரு தினங்களுக்கு முன் அரசாங்கம் கவிழுமாயினும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் எனத் தெரிவித்துள்ளமை ஜே.வி.பியினரை சீற்றம் கொள்ள வைத்துள்ளது.

இந்நிலையில் ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவானால்ஆட்சியைக் கவிழ்ப்போம் என சனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்து வருவதோடு, அதற்கு முன்னோடி நடவடிக்கை போன்று மின்சாரசபை மறுசீரமைப்புத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து வெளியேறியுள்ளது.

ஜே.வி.பி அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து வெளியேறியமையானது மின்சாரசபை மறுசீரமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தா? அன்றிப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தா? எதுவாக இருப்பினும் சரி சனாதிபதி சந்திரிகாவின் முடிவுகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தாம் தயாராக இருப்பதை ஜே.வி.பி வெளிக்காட்டியுள்ளது என்றே கூற முடியும்.

ஆட்சியில் இருந்து வெளியேறப் போவதும் இல்லை முக்கிய பிரச்சினைகளில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கப் போவதுமில்லை என்ற அதன் நிலைப்பாடானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசியற் செயற்பாடுகளுக்குப் பெரிதும் இடையூறுவிளைவிப்பதாகவே இருக்கும். வேறுவிதமாகக் கூறுவதானால் ஜே.வி.பியுடன் உறவை வைத்துக் கொள்வதா? அன்றி முறித்துக் கொள்வதா? என்ற நிர்ப்பந்தத்தை அவருக்கு ஏற்படுத்துதல் கூடும்.

சனாதிபதி சந்திரிகா எதிர்நோக்கும் இத்தகைய நெருக்கடி நிலைக்கு இங்கு கவலைப்பட எதுவுமில்லை ஏனெனில் ஜே.வி.பி.யை வளர்த்து விட்டவர்கள் அதை அனுபவிக்க வேண்டியுள்ளது என்பது மட்டுமே எம்மால் கூறத்தக்கது. ஆனால் சனாதிபதி சந்திரிகா அடுத்த வார முடிவிற்குள் எடுக்க வேண்டிய தீர்மானம் சந்திரிகா அரசாங்கத்தின் எதிர் காலத்தை மட்டுமல்ல நாட்டின் எதிர்காலத்தையும் தீர்மானிக்க வல்லது. அதாவது யுத்தமா? சமாதானமா? என்பதையும் தீர்மானிக்கும் ஒன்றாகவே இருக்கும் எனத் துணிந்து கூற முடியும்

# ஜே.வி.பி பிரச்சார செயலர் உரையால் என்னுடைய உயிருக்கு அச்சுறுத்தல்!

### -'சண்டே லீடர்' ஆசிரியர் முறைப்பாடு

ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச கடந்த புதன் கிழமை கொழும்பிற்கு வெளியே நடைபெற்ற வைபவமொன்றில் ஆற்றிய உரை மூலம் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது தெளிவாகியிருப்பதாக சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க சிறிலங்கா பொலிஸ் மா அதிபரிடம் புகார் செய்துள்ளார்.

குறிப்பிட்ட ஜே.வி.பி பிரமுகர் தனது உரையில் என்னை சில ஊடகவியலாளர்களுடனும், சர்வதேச தொண்டர் அமைப்புக்களுடனும் தொடர்புபடுத்தி பொருத்தமற்ற முறையில் உரையாற்றியுள்ளார். தராகி எனப்படும் விடுதலைப்புலிப் பயங்கரவாதியை விட லசந்த விக்கிரமதுங்க மோசமான பயங்கரவாதி என அந்த உரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் எனது பாதுகாப்புத் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பற்றி குறிப்பிட்ட நபரை விசாரணைக்குட்படுத்த வேண் டும் என்றும் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தான் சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருவதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உலக சந்தையின் போக்கிற்கேற்ப எண்ணெய் விலை உள்நாட்டில் அதிகரித்தால் அரசாங்கம் எதற்கு?

### -ஐக்கிய தேசியக் கட்சி விசனம்

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரிக்கின்ற போது இலங்கையில் எரிபொருளின் விலை உயருமாக இருந்தால் அரசாங்கம் எதற்காக? என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் இதேகேள்வியை ஜே.வி.பி கேட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்த ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதி செயலர் திஸ்ஸ அத்தநாயக்க உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையேற்றம் ஏற்படும் போது இலங்கையில் எரிபொருளின் விலை ஏற்றம் ஏற்படும் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிக்கும் போது உள்நாட்டில் எண்ணெய் விலை அதிகரிக்குமானால் அரசாங்கம் ஒன்று எதற்கு என்பதே கேள்வியாகும். இந்த நிலையில் அரசாங்கத்தின் நிர்வாக சீரின்மையின் காரணமாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்வதே எரி பொருட்களின் விலையேற்றத்திற்கான காரணமாகும் என்றார்.

# மின்சாரசபை மறுசீரமைப்புத் திட்டம் தேசிய பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல்

### -ஜே.வி.பியினர் எச்சரிக்கை

(கொழும்பு)

மின்சாரசபை மறு சீரமைப்பு என்ற பெயரில் அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் நடவடிக்கையால் தேசிய பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் சனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இதனை ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லையெனவும் அதேசமயம் சுதந்திரமுன்னணியிலிருந்து வெளியேறாமல் உள்ளுக்குள்ளிருந்தே அரசை திருத்தப்போவதாகவும் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது. நாம் அரசிலிருந்து வெளியேறி விடுவோமென சிலர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அவ்வாறானதொரு முடிவுக்கு ஜே.வி.பி இன்னும் வரவில்லை. வழிதவறிச் செல்லும் அரசாங்கத்தைச் சரியான வழிக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம் அதற்கு நாம் அரசிலிருந்து கொண்டு தான் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறிலங்கா பொருளாதார மையங்கள் ஒவ்வொன்றையும் அரசு விற்பனை செய்து கொண்டிருக்கின்றது. இதனால் வறுமை நிலையே மிகுதியாக இருக்கப் போகின்றது.

1977 ஆம் ஆண்டிலிருந்து எமது நாடு வேறுபொருளாதாரக் கொள்கைக்கு மாற்றப்பட்டது. இக்கொள்கை 2004 ஆம் ஆண்டு வரை முன்னெடுக்கப்பட்டது. இந்த 27 ஆண்டுகாலப்பகுதியில் அரசிடம் இருந்த உற்பத்திகள் ஒவ்வொன்றாக இல்லாதொழிக்கப்பட்டன. இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வறுமை நிலை ஏற்பட்டது. அந்தப் பொருளாதாரக் கொள்கை தோல்வியடைந்து விட்டது. இதனாலேயே ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது.

இத்தோல்வியடைந்த பொருளாதாரக் கொள்கையை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என்றும் ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளது.

# போக்குவரத்துச் சட்டங்களை மீறிய 800 சாரதிகள் விசேட நடவடிக்கையில் கைது!

(கொழும்பு)

போக்குவரத்துச் சட்டத்தைமீறிய 800 இற்கு மேற்பட்ட வாகனச் சாரதிகளை சிறிலங்கா பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பு, குருநாகல் வீதியில் நடாத்திய விசேட செயற்றிட்டத்தின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிறிலங்கா பிரதி பொலிஸ்மா அதிபர் அசோக்க ரட்ணவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொலிஸ் கொழும்பு தலைமையகம் மற்றும் குருநாகல் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட பொலிசார் இந்த விசேட செயற்றிட்டத்தில் கலந்துகொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான தனியார் பேருந்துக்களின் சாரதிகள் மிக வேகமாக வாகனங்களைச் செலுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், குடிபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை, போக்குவரத்துச் சட்டங்களை மீறிச் செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரிலும் பலர் கைது செய்யப்பட்டதாகவும் வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிறிலங்கா பிரதி பொலிஸ்மா அதிபர் அசோக்க ரட்ணவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# மேல்கொத்மலைத் திட்டத்தை ஆட்சேபித்து போராட்டம்

மேல் கொத்மலைதிட்டத்தை ஆட்சேபித்து எதிர்வரும் 15 ஆம் திகதி எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மேல்கொத்மலைதிட்டத்திற்கு எதிரான இயக்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

மலையக மண்ணுக்காக உயிர்நீத்த சிவணு லட்சுமணனை நினைவு கூர்ந்தே இந்த எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

1977 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி காணியை சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சியை எதிர்த்து போராடிய யொக்ஸ்போர்ட் தோட்ட இளைஞன் சிவணு லட்சுமணன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த நிலையில் சிவணு லட்சுமணன் வாழ்ந்த பிரதேசத்தில் மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திட்டம் அமைக்கப்படுவது அவரின் இலட்சியத்தை தகர்க்கும் செயலாகுமென மேல் கொத்மலைக்கு எதிரான அமைப்பு தெரிவித்துள்ளது. எனவே எதிர்வரும் 15 ஆம் திகதி மலையகத்தில் வியாபாரத்தளங்களை மூடியும் சொந்த மற்றும் பொது இடங்களில் கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான இயக்கம் கேட்டுள்ளது.

# தென்மாகாணசபை நிர்வாகத்தில் ஜே.வி.பி அதிருப்தி

## கடும் நடவடிக்கையெடுக்க தயாரென அறிவிப்பு!

(கொழும்பு)

தென்மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து முறையிட்டு ஜே.வி.பி சிறிலங்கா சனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

தென்மாகாண சபையின் அமைச்சரவை தனது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை நிறுத்தாவிடின் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமது கட்சி கடும் நடவடிக்கைகளை எடுக்குமென குறிப்பிட்டு ஜே.வி.பியின் தென்மாகாண சபை உறுப்பினர்கள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர். மாகாணசபையின் பணத்தில் தென்மாகாண சபையின் விவசாய அமைச்சர் 85 லட்ச ரூபாவிற்கு சொகுசு வாகனமொன்றை வாங்கியுள்ளார். இன்னொரு அமைச்சருக்கும், சபையின் பிரதித்தலைவருக்கும் அவ்வாறான சொகுசு வாகனங்கள் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாகாணசபை தலைமைத்துவத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் பல பிரச்சினைகள் தோன்றியிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் தென்மாகாண சபை ஈடுபடாது சொகுசு வாகனங்களை வாங்கி சொகுசு வாழ்க்கை வாழ முற்படுவதை ஜே.வி.பி வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மாகாண சபையின் 45 ஆசனங்களில் 14 ஆசனங்கள் மக்கள் விடுதலை முன்னணியிடமும், 12 ஆசனங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியிடமும் 19 ஆசனங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடமும் உள்ளன.

# தப்பியோடிய படையினரிடம் 30 ஆயிரம் ஆயுதங்கள்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கு சொந்தமான 30000 ஆயுதங்கள் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசி விக்கிரம நாயக்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சிறு ஆயுதங்களை இல்லாதொழிப்பதற்கான ஆணைக்குழுவின் அலுவலகம் நேற்று பண்டார நாயக்க ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட இந்த ஆயுதங்களே நாட்டில் இடம்பெறும் வன்முறைகளுக்கு முக்கிய காரணிகளாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் இவ்வாறு படையில் இருந்து தப்பி சென்றவர்களை பொலிசாரிடம் இனம் காட்டுவதன் மூலம் அவர்களிடமிருந்து சட்ட விரோதமான ஆயுதங்களை கைப்பற்ற முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (32)

# மணலாறு களமுனை போராளிகளுடன் குமுழமுனை மக்கள் சந்திப்பு

## -கருத்துக்களை பரிமாறி மகிழ்ந்தனர்

(புதுக்குடியிருப்பு)

குமுழமுனை பிரதேச மக்கள் மணலாறு களமுனைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு போராளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் உலர் உணவுகளையும் வழங்கி உபசரித்தனர்.

கடந்த செவ்வாயன்று மாலை 4.00 மணிக்கு குமுழமுனை மாதர் சங்கத்தினர் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் எனப் பலர் மணலாறு களமுனை பகுதிக்கு சென்றிருந்தனர்.

கொட்டும் மழையையும் பொருட் படுத்தாமல் மக்கள் களமுனைக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்கள் போராளிகளுடன் கலந்துரையாடும் போது நாம் என்றும் உங்களுடன் பக்கபலமாக நிற்போம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (08)

# கும்பஸ்தரை காணவில்லை

## யாழ்.இல் மனைவி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவர் காணமால் போயிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குப்பிளானைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பரமநாதன் சீவரத்தினம் (வயது-50) என்பவரே காணமால் போயிருப்பதாக அரவது மனைவி நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி வேலைக்குச் சென்று வருவதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்ட பிரஸ்தாப நபர் இன்னமும் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# த.பு.கழகத்தின் பணம் மற்றும் வாகனத்தை எந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளீர்கள்

## -மன்னார் நீதவான் பொலிசாரிடம் விளக்கம் கோரல்

(மன்னார்)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரியிடம் இருந்து உயிலங்குளம் இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து கைப்பற்றப்பட்ட ஒரு கோடி எண்பத்தொன்பது இலட்சம் ரூபா ரொக்கப்பணத்தையும் லான் குறூசர் ஜீப் வண்டியையும் எந்தச் சட்டத்தின் கீழ் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதென்பதை நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எம்.அப்துல்லா நேற்று பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த இரண்டாம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பணத்தினை மீளத்தருமாறு கோரி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் மன்னார் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தொடர்பாக பொலிசார் கூறுகையில் இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை புலனாய்வு பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான புலனாய்வு அறிக்கையும் சட்டமா அதிபரின் பணிப்புரையையும் எதிர்நோக்கி இருப்பதாகவும் கூறி பணத்தை விடுவிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து மேல் விசாரணை அறிக்கையை எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனப் பொலிசாருக்கு உத்தரவிட்டதுடன் விசாரணைகளை வரும் திங்கட் கிழமைக்கு நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

# த.பு.கழகத்தின் மற்றுமொரு வாகனம் பொலிசாரினால் தடுத்து வைப்பு!

தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்குச் சொந்தமான மற்றுமொரு வாகனமும் மன்னார் சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியிலிருந்து மன்னார் நோக்கி புறப்பட்ட இவ் வாகனம் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து ஆவணப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட போது ஆவணங்களில் தெளிவற்ற தன்மை காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனம் போன்று இந்த வாகனமும் அம்புலன்ஸ் வண்டி என வாகனப்பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் குறிப்பிட்ட வாகனம் ஜீப் வண்டி என பொலிசார் தெரிவித்தனர்.

நோர்வேயினால் மிதிவெடி அகற்றும் பணிகளுக்காக இந்த வாகனம் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்ததாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

வாகனத்தில் பயணம் செய்த வாகனச் சாரதி சரசாலையைச் சேர்ந்த வடிவேல் பத்மராசா மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்களான வசாவிளானைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சூரியராஜேஸ் மற்றும் மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த குலசிங்கம் சிவகுமார் ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைதாகி நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் சடலம் மீட்பு!

(செட்டிகுளம்)

வவுனியா பாவற்குளம் தாளிக்குளம் என்ற இடத்தில் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இவரின் கொலைக்கு தனிப்பட்ட காணிப் பிரச்சினை ஒன்று காரணம் என்று ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று செட்டிக்குளம் பொலிசார் தெரிவிக்கின்றார்கள்

நேற்று முன்தினம் இரவு இவர் வீட்டில் இருந்து வெளியே அழைக்கப்பட்டு காட்டுப் பகுதிக்குள் கொண்டு செல்லப்பட்டு தலை வெட்டப்பட்டுள்ளது. கொலையுண்டவர் கந்தையா சிறீதரன் என்றும் இவரை மாகாலிங்கம் என்றும் அழைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது இவருக்கு இரண்டு மனைவிமாரும் நான்கு பிள்ளைகளும் உள்ளார்கள்.

மேற்படி கொலை நடைபெற்ற இடத்தில் கொலையுண்டவர் அணிந்திருந்த சங்கிலி, மோதிரம் பிரயாணம் செய்த உந்துருளி என்பனவும் இருந்தது. அத்துடன் காட்டுப் பகுதியில் காணிக்குரிய ஆவனங்களும் மீட்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வவுனியா நீதிமன்றத்தில் இவருடைய காணி வழக்கு ஒன்று நிலுவையில் இருந்து நேற்று முன்தினமே தீர்க்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

மதியம் ஸ்தளத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதவான் விசாரணைகளை மேற்கொண்டார்

நேற்றுக் காலை மேற்படி இடத்தில் சடலம் ஒன்று இருப்பதாக அப்பகுதி மக்கள் பொலிசாருக்கு முறைப்பாடு தெரிவித்தனர் இதனை அடுத்து அப்பகுதிக்கு பொலிசார் சென்று சடலத்தினை கண்டு பிடித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (21)

## உண்ணாவிரத...

பினர்கள் தங்களை வந்து சந்திக்க வேண்டுமெனக் கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஐவர் ஆரம்பித்திருந்தமை தெரிந்ததே.

நேற்று சிறிலங்காப் பாராளுமன்றத்தில் ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராம் படுகொலை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டிருப்பதால் கொழும்பில் தங்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று மட்டக்களப்பு திரும்பியவுடன் இவர்களை சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சனாதிபதி...

கட்டமைப்பு விவகாரம் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்டாலும் இரு தரப்பிற்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படவில்லை எனவும் ஜே.வி.பி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளத் தயாராகவில்லை எனவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை உத்தேச பொதுக கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பியினர் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களைக் கட்டியெழுப்ப சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் ஒன்றிணைந்து பணியாற்றக் கூடிய வகையில் ஏற்படுத்தப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பிற்கு மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. அதன் முதற்கட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு கொழும்பு நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தாதே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கு எனும் தொனிப் பொருளின் கீழேயே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

## பொதுக்கட்டமைப்பு...

மெனவும், அவ்வாறு பொதுக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படும் பட்சத்தில் அதற்குத் தேவையான பூரண ஆதரவை உலக வங்கி வழங்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியினர் தெரிவித்துவரும் கருத்துக்களை தாம் கவனத்தில் கொள்ளப்போவதில்லையென உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலிகளின்...

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளார்.

## சிவராம்...

செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயத்தின் முன்பாக ஆரம்பமாகும் இப்பேரணியானது நகரின் ஊடாக சென்று வவுனியா அரச செயலகத்தில் முடிவடையும்.

இந்தப் பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பொது அமைப்புக்களை சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். பேரணியின் முடிவில் வவுனியா அரச அதிபர் ஊடாக சனாதிபதிக்கு மகஜர் அனுப்பப்படும் இதன் பிரதிகள் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு உட்பட பலருக்கு மகஜர்கள் அனுப் பப்படவுள்ளது என்றும் வன்னி பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (21)

## நெருக்கடியான...

தேசியத் தலைவர் அவர்கள் ஆசிச் செய்தி அனுப்பியிருப்பது பல விடயங்களைப் புரிய வைத்திருக்கின்றது. எங்கள் அடுத்த கட்ட வளர்ச்சிப்படி அடுத்த கட்டச் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக அமையும்.

ஜெயந்தன் படையணியாக விடுதலைப் போராட்டத்திற்காக 1234 வீரர்கள் தங்கள் உயிரை ஆர்ப்பணித்துள்ள நிலையில் நெருக்கடியான கால கட்டங்களில் தலைவர் தீட்டுகின்ற திட்டங்களை துணிவாக நின்று வெற்றிகரமாக செயற்படுத்தினர்.

இந்தப் படையணியில் இருக்கின்ற வீரர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். ஜெயந்தன் படையணியின் புகழ் நிலைத்து நிற்க வேண்டுமானால் தமிழீழத்தின் சகல திசைகளிலும், இருக்கின்ற எதிரியை ஓடஓட விரட்டவேண்டும். என்றும் இந்தப் படையணியின் பெயர் கேட்டு சிங்களப் படைகள் மிரண்டு புறமுதுகு காட்டி ஓடியிருக்கின்றது என்றால் படையணியின் வலிமை எப்படியானது என்றும் எனவே எதிர்வரும் காலங்களில் இந்தப் படைணியை வலுப்படுத்தி எமது போராட்டத்தை முன்னெடுக்க அனைவரும் முன் வர வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.